483

# SEETHA

OR

# [illegible]PPARASI

17 JAN 1930

N. T. DEVARAJULU NAIDU & Co.,
MADRAS.

O15,1A1'g
N129

# சீதை

அல்லது

# கற்பரசி

டி. வி. பார்த்தஸாரதி அய்யங்கார்
தமிழ்ப்பண்டிதன்;
(Late) கிறிஸ்தவ கலாசாலை,
மதராஸ்.

கே. டி. தேவராஜுலு நாயுடு அண்டு கோ.,
261, சைனபஜார் ரோட்,
மதராஸ்.

காப்பிரைட்] 1929 [விலை அணா 6

PRINTERS:

TIRUPATI SRI MAHANT'S PRESS

MADRAS.

# முகவுரை.

இஃது ஒரு அருமையான கற்பரசியின் சரிதம் என்பதை உலகில் அறியாதார் இல்லை. ஆயினும், இவளது அறக்கற்பின் பெருமையையும் பொறுமையையும் அனைவரும் எளிதில் அறியவேண்டும் என்ற நோக்கத்துடனே, இது எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. இது பள்ளியில் படிக்கும் சிறுவர்களுக்கு மிகவும் இன்றியமையாதது. இது படிக்கும் மாணவர்களுக்குக் கற்பின் மாட்சிமை விளங்குவதுமன்றி, நம் நாட்டு நங்கையர் முன்னர் கொண்டுள்ள வழக்க பழக்க ஒழுக்கமும் நன்றாகத் தெரிவிக்கக் கூடியது. ஆகையால், இதனைக் கல்விக் கழகங்களில் பாட புத்தகமாக வைத்து ஆதரிக்க அறிஞர்களை வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

T. C. P. SARATHY.



சீதா கலியாணம்.

# சீதை

## சீதையின் தோற்றம்

சனகர் என்பவர் ஒரு சிறந்த அரசர். அவர் அரசராக இருந்தும், ஒன்றிலும் பற்று இல்லாதவராகவே இருந்தார். அதனால் அவரை எல்லோரும் ராஜரிஷி என்று சொல்லுவார்கள். அவர் ஆண்டுவந்த நாடு விதேகம் என்பது. அதன் தலைநகரம் மிதிலை என்னும் அழகிய பட்டணம்.

சனகருக்கு வெகுகாலம் புத்திரபாக்கியம் இல்லாமல் இருந்தது. அந்தக் குறையைத் தீர்த்துக்கொள்ளுவதற்காக அவர் யாகம் செய்ய எண்ணினார்.

அக்காலத்தில் யாகம் செய்யவேண்டினால், அரசர்கள் தாங்களே பொன்னேர் கட்டிப் பூமியை உழுது பண்படுத்துவார்கள். அந்த வழக்கப்படி ஒருநாள் சனகர் யாகசாலை அமைப்பதற்காக நிலத்தை உழுது கொண்டிருந்தார். அப்போது கொழுமுகத்தில் ஒரு பொற்பெட்டி அகப்பட்டது. உடனே அவர் அதைத் திறந்து, அதில்

இருந்த பெண் குழந்தையைப் பார்த்தார். அவருக்கு இவ்வளவு என்று சொல்லமுடியாத ஆனந்தமுண்டாயிற்று. அது கடவுள் கிருபை என்று எண்ணி, அவர் உடனே அக்குழந்தையை எடுத்துப் போய் சீதை எனப் பெயரிட்டு, அன்போடு வளர்த்து வந்தார். அப்பெண் அரண்மனைக்கு அணிகலம். அனைவருக்கும் அருமை. அவள் வளர்பிறை போலும் வளர்ந்து வந்தாள். வயது ஏற ஏற மிக்க அறிவும், இனிய நடையும், பரிசுத்த மனமும், சொல்ல முடியாத அழகும் உடையவள் ஆனாள். அவள் பெயர் எங்கும் நிலவுபோலப் பரவிற்று. சனகர் நல்ல ஞானியாக இருந்தும் சீதையோடு குலாவாமல் ஒருநாளும் இருப்பதே இல்லை. அவருக்குச் சீதையின் குணங்கள் மிகவும் மனச் சந்தோஷத்தைக் கொடுத்துக் கொண்டே வந்தன.

சீதைக்கு இளமைப் பருவம் நீங்கித் தக்க வயதாயிற்று. அரசிளங்குமரர் அநேகர் அவளைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டி ஒருவர்மேல் ஒருவராகத் தினம் வந்தார்கள். சனகருக்கு அவளை யாருக்குக் கொடுப்பதென்று தோன்றவில்லை. அவளுடைய குணங்களுக்குத் தக்க புருஷன்

கிடைக்கவேண்டுமே என்ற கவலை அவருக்ருக்குப் பெரிதாயிற்று. பின்பு, ஒருநாள் அவர் தன் மந்திரிகளை வைத்துக் கொண்டு ஆலோசித்தார். அப்போது அவருக்கு ஒரு எண்ணம் தோன்றியது. அவர் அன்றுமுதல் சீதையின் கலியாணத்தைக் குறித்துவரும் அரசகுமாரர்களுக்கு எல்லாம், பன்னெடு நாளாய்த் தம் குடும்பத்தார் பூசித்துவந்த ஓர் வில்லைக் காண்பித்து, "அதனை வளைத்து ஒடிப்பவருக்கே இச் சீதையைத் தருவேன்" என்று சொன்னர்.

அவ்வில்லோ சிவபெருமானுடையது. மிகவும் பளுவானது. உலகில் சிறப்புற்றது. அது காண்பதற்கும், தூக்கி நாட்டுவதற்கும் பயத்தைச் செய்வதாக விருந்தபடியால், வந்த வரசர்கள் அதை அசைக்கவும் முடியாமல் அவமானம் அடைந்து திரும்பிப் போனர்கள். சனகருக்கும், 'சீதையின் கலியாணம் எப்போது நடைபெறும்; அதைக் கண்டு களிப்பது எப்போதோ' வென்று பெருத்த கவலை உண்டாயிற்று.

இப்படி யிருக்கையில், ஒருநாள் முனிவர் ஒருவர், இரண்டு வாலிபர்கள் பின்னே வர, சனகரது மண்டபத்தை நோக்கி வந்தார். அவர் சடையின் நீளத்தாலும்,

புலித்தோல் அணிந்த தேகத்தாலும், வளர்ந்து சுருண்டுள்ள நகத்தாலும் துறவியாகக் காணப்பட்டார். அவருடைய முகம் மிகவும் பிரகாசத்துடன் விளங்கியது. அரச விலக்கணங்கள் நிறைந்து இருந்தது. அவருடைய கண்களில் சாந்தமே தென்படவில்லை. கண்டவர் அஞ்சும்படியான பயக்குறியே தோன்றியது. அவ்விரண்டு குமாரர்களும் வயதில் சிறியவராயினும், கம்பீரமான நடையும், மிகுந்த தேககாந்தியும் உள்ளவர்கள். அவ்விளைஞர் மார்பிலே முப்புரிநூல் அசைந்து கொண்டிருந்தது. அவர்கள் கையில் கடகம் பளபளவென்று சொலித்தது. தோளில் இருந்த வில் பகைவருக்குப் பயமுறுத்தியது. இடையிலே பீதாம்பரம் பிரகாசத்தைச் செய்தது. கைகள் விசாலமாக நீண்டு முழந்தாள் வரையில் தொங்கின. கண்கள் தாமரை மலரைப் போல விருந்தன. தலைமயிர் சுருள்படிந்து இருந்தது. அழகே ஒரு உருவை எடுத்துக்கொண்டு மானிடரை மயக்க வந்ததுபோல விளங்கினர்கள். அப்போது சபையில் வீற்றிருந்தவர்கள் எல்லாம் அவ்விளங் குமாரர்களை வைத்த கண் வாங்காமல் பார்த்தார்கள். அங்கே பணி

விடை செய்து கொண்டிருந்த தோழிகளில் சிலர், ‘இவர்களே நம்முடைய சீதாதேவிக்குச் சரியான அழகினைக் கொண்டவர்கள். இவர்களுள் முனிவருக்கு அருகாமையில் நிற்பவனே நம் சீதைக்கு முற்றும் தகுதியுடையவன்’ என்று பேசிக் கொண்டனர். ஒரு சிலர், ‘இவ்விரண்டு வாலிபர்களும் பூலோகத்திலுள்ள அரசர்களின் மக்கள் அல்லர். ஏதோ இம்முனிவர் மாயத்தால், நம்மரசன் மனத்தைப் பரிசோதிக்கவே இவ்விதமான உருவத்துடன் இவர்களை அழைத்து வந்திருப்பவர் போலத் தோன்றுகின்றனர்’ எனச் சந்தேகம் அடைந்தார்கள்.

சனகர் சிங்காதனத்தில் இருந்து கீழே இறங்கினர். அங்குள்ளவர்கள் எல்லாரும் காண முனிவருடைய காலில் அவர் நமஸ்கரித்தார். உடனே, “முனிவர் நாயகமே! விசுவாமித்திரரே! வாரும்! வாரும்! இன்று தான் நான் பாக்கியம் அடைந்தேன்” என்று அவரைக் கொண்டாடிச் சிங்காதனத்தில் அமர்த்தினர். சிறுவருக்கும் ஆசனம் கொடுத்தார். பின்பு தாமும் உட்கார்ந்தார். முனிவருடைய சேமத்தை வினவினர். “தேவரீர் இங்கு எழுந்தருளியதற்கு ஏதோ

ஒரு காரியம் இருந்திருக்கவேண்டும். நல்லது, இவ்வாலிபர் இருவரும் யாவர்?" என்றார்.

விசுவாமித்திரர், "அரசே! இவர்களை நீர் இதுவரையில் அறியீரோ! அயோத்திமா நகரத்தை ஆளும் தசரத மன்னரின் புதல்வர்கள். இவன் மூத்தவன்; இராமன் என்னும் பெயரையுடையவன். இவன் வில்போர் செய்வதிலும், மற்போர் செய்வதிலும் மேன்மையுற்றவன். கலைகள் அனைத்தையும் கசடறக் கற்றவன். நற்குணங்களுக்கு எல்லாம் இருப்பிடமானவன். தாய் தந்தையரைத் தெய்வமாகக் கொள்பவன். என் போன்றவர்களிடத்தில் அளவில்லாத பக்தியைக்கொண்டு நடப்பவன். இச்சிறுவன் இவனுக்குத் தம்பியாகும். இலக்குமணன் என்னும் பெயருடையவன். தன் அண்ணனை எப்போதும் விட்டுப் பிரியாதவன். அண்ணன் அடையும் இன்பமே தானடையும் இன்பமாக எண்ணும் தூயமனமுடையவன். உம்மிடம் உயர்ந்ததோர் வில்லிருப்பதாகக் கேள்வியுற்றனராம். அதன் வலிமை காணவே இவர்கள் என்னுடன் இவ்விடம் வந்தார்கள்" என்றனர்.

அதுகேட்ட, சனகர் புன்னகை செய்து, "முனிவ! இவர்கள் இன்னும் வாலிபம் நீங்காதவர்கள். இவர்களால் இவ்வளவு பெரிய வில்லை எடுக்க முடியுமோ?" என்றார். முனிவர், "சனகரே! அவ்வாறு நினைக்க வேண்டாம். உருவத்தால் ஒருவன் திறமை யுள்ளவனென்றும், அற்றவனென்றும் எங்ஙனம் நிச்சயித்தல் முடியும்"? என்று பதில் சொல்லினர்.

அப்போது சனகருடைய கண்ணும் கருத்தும் இராமனிடம் சென்றது. இவனே தன் மகளுக்கு ஏற்ற மணவாளன் என்று அவருக்கு எண்ணம் தோன்றியது. ஆயினும் அவர் தம் ஏற்பாட்டின்படி, 'இவன் வில்லை வளைக்க வேண்டுமே! அதல்லவா முக்கியமான செய்கை' என ஒரு சந்தேகம் எழுந்தது. நல்லது" என்று சொல்லி அவர் வில்லைக் கொண்டுவரும்படியாக அநேக ஆட்களை அனுப்பினர்.

கொஞ்ச நேரத்தில் எட்டுச் சக்கரங்களை யுடைய ஒரு பெரிய பேழையை ஆயிரம்பேர் உருட்டி வந்து நிறுத்தினர்கள். சபையில் இருப்பவர்கள் 'இதென்ன சனகரின் காரியம் விபரீதமாக விருக்கின்றதே! இச் சிறுவர்கள் இளமைப் பருவம் கடவாதவர்கள்.

இவர்களை அப் பெரிய வில்லை வளைக்கும்படி யாக வற்புறுத்தினால் ஒரு சமயம் கஷ்டம் நேரிடப் போகின்றதே! முனிவருக்குக் குழந்தைகளின் அருமை தெரியுமா ?" என்று பேசிக்கொண்டனர். வேறொருவர்; 'நீங்கள் சனகர் மாத்திரம் குழந்தைகளின் அருமை அறிவார் என்று பேசுகின்றீர்களோ! அவ் வாறு நினைக்க வேண்டாம். இப்பெண் சானகியை அவர் நிலத்தில் கண்டு எடுத்து வளர்த்து வந்தாரென்பதைத் தெரியீரோ' வென்றார். அவர்கள் 'ஆம்; உண்மை தான்; ஆயின், அரசன் செய்வதை நாம் இடையில் தடுத்தல் கூடுமோ' என்று சும்மா பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சனகர் விசுவாமித்திரைப் பார்த்து, "முனிவ! தாங்கள் கேட்ட வில்லானது இப்பெட்டியிலுள்ளது. சற்று முன்பு இதை அநேக அரசர்கள் அசைத்து அயர்ந்தார்கள். சிலர் எடுத்து ஏங்கினார்கள். சிலர் கண்டு தியங்கினார்கள். பாரும்! இஷ்டமானால் இச்சிறுவர் எடுத்து வளைக்கலாம்" என்றார். அதுகேட்ட முனிவர் இராமனைக் கடைக் கண்ணால் நோக்கினார். இராமன் எழுந்தோடிப் பெட்டியைத் திறந்தான். ஒரு விநாடிக்குள் வில்லை வெளியில் எடுத்தான்.

தனக்கு எதிரே நிறுத்தினான். இடக்கையால் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு நாணேற்றினான். வில் இரண்டு துண்டாக முறிந்தது. உடனே கோடைக்காலத்து இடி போல ஒரு சத்தம் எழுந்தது. அங்கே இருந்தவர்களில் சிலர் பயந்தார்கள். பலர் ஆச்சரிய மடைந்தார்கள். சிலர் அவ்வோசையால் தேகச்சுவாதீனம் அற்றவர்களானார்கள். தேவர்கள் திகைத்துக் காரணந் தெரியாமல் ஆலோசித்தார்கள். ஞானவான்கள் இனி நாம் சௌக்கியத்தைச் சீக்கிரத்தில் அடைவோ மென்று மன மகிழ்ந்தார்கள். நாகர் நடுங்கினார்கள். தசரதரும் அந்தச் சப்தம் கேட்டு ஒன்றுந் தோன்றாமல் திகைத்தார். பின்பு கொஞ்சநேரம் வரையில் கண்ணை மூடிவிட்டார். அது வரையில் இவ்வளவென்று சொல்ல முடியாத அரசகுமாரர்கள் வந்து அசைக்கவும் வலிமையற்றுப் பின்னிடைந்து போயினதை அங்கிருந்த பலரும் நன்றாக அறிவார்களன்றோ!

சனகர் மகா யோகியாயினும், அன்று அவர் அடைந்த இன்பத்திற்கு அளவே கிடையாது. சீதையைக் கொழுமுகத்தில் கண்ட காலத்து அடைந்த ஆனந்தத்தினும், இராமனை அவள் கணவனாக அடைந்த

காலமே அவரைக் களிக்கச் செய்தது. உடனே அவர் முனிவரைப் பார்த்து, "மா முனிவ! எல்லாம் உமது அருளே! பெரியவர் சகாயம் உண்மையாக விருப்பின், ஒருவனுக்கு இவ்வுலகில் ஆகாத காரியமென்னவிருக்கிறது! ஆயினும், என் கொள்கையின் படியே இவ்வில்லை நிமிர்த்தி வளைப்பவருக்கே எனது மகளைக் கொடுப்பது என ஏற்பாடு செய்திருந்தேன். அவ்வேற்பாட்டின் படி இச்சிறுவன் சீதையைக் கலியாணம் செய்து கொள்ளுதல் வேண்டும். இவ்வில்லை வளைத்துச் சீதையை மணக்க என்னிடம் பல அரசகுமாரர்கள் வந்தார்கள். அவர்கள் எல்லாரும் இவ்வில்லை வளைக்கத் தவறியதால் இனி என் மகளுக்குக் கலியாணமே இல்லை என்றே நான் நிச்சயம் செய்து விட்டேன். அவ்வாறு பெண்களை வைத்திருப்பது தாய் தந்தையருக்கு அவமானமாயிற்றே என்று ஏங்கிக்கொண்டிருந்தேன். இப்போது என் ஏக்கம் ஒழிந்தது. என் எண்ணப்படி நடந்தது. இனி அயோத்திக்கு ஆட்களை அனுப்பி இவனது தாய் தந்தையருக்கும், பந்து மித்திரர்களுக்கும் தெரிவிக்க வேண்டும். தாங்களும் இங்கேயே எழுந்தருளி இருந்து கலியாணத்தை நடத்த

வேண்டும்" என்று வேண்டினர். விசுவாமித்திரர், "சனகரே! அதற்கென்ன தடையுள்ளது. எல்லாம் நன்மையாகவே முடிவு பெறட்டும்" என்றார்.

சீதையின் மணம்.

தசரதர் குற்றம் இல்லாததும், சத்தியத்தைக் கைக்கொண்டதுமான பழைய இக்ஷுவாகு வமிசத்தில் பிறந்தவர். யாவராலும் கொண்டாடப்பட்டவர். தருமமே நாளும் தகுதியுடையது என்று மறவாதவர். அவரிடம் சனகரால் அனுப்பப்பட்ட தூதர்கள் வந்து, கலியாணச் செய்தியைக் கூறினர்கள். தன் மகனின் கலியாணத்தைக் கேட்ட தசரதருக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகியது. இச் செய்தியை அரண்மனையிலுள்ளோரும் அறிந்தனர்.

அவர்கள், "சனகர் எங்கும் பரவிய கீர்த்தியுடையவர். உயிருக்கு இறுதி வருவதாயினும் உண்மையே உரைப்பவர். தருமநெறி தவறாமல் அரசாண்டு வந்த நிமி என்னும் அரச குலத்தில் தோன்றியவர். ஞானிகளுக்குள் சிறந்த ஞானி. ஆகவே தசரதருக்குச் சனகருடைய குலத்தில் பெண் கொள்வது மிகுந்த சிறப்பேயாகும்" என்று சுமந்திரர்

முதலியோரும் அளவில்லாதபடி கொண்டாடினார்கள். வஸிஷ்டரும் தசரதரைப் பார்த்து, "இதுதான் நீர் செய்த பெருந் தவம். உலகில் கொள்வாரும் கொடுப்பாரும் சரியாக இருந்து, சம்பந்தம் நேரிடுவது மிகவும் கடினம். சனகரோ அரசராகக் காணப்பட்டாலும் ஆன்ம ஞானமுடையவர். ஆற்றலில் வல்லவர். தாமரையில் தண்ணீர்போல் அரச செல்வத்தைப் பாவிப்பவர்" என்றார். தசரதர், "உமது வாக்கினால் இத்தகைய வார்த்தைகள் வந்தபிறகும் எனக்கென்ன கவலை யிருக்கிறது? இதோ புறப்பட்டு விட்டேன்" என்று, எல்லாரையும் அழைத்துக் கொண்டு மிதிலைக்குச் சென்றார். அங்கே அநேக தேசத்து அரசர்களும் வந்திருந்தார்கள். வேதியர்கள் கூட்டம் கூட்டமாகக் கூடியிருந்தார்கள். புலவர்கள் புதுமை புதுமையாகக் காணப்பட்டார்கள். எங்கும் கொடிகளும், தோரணங்களும், மண்டபங்களும், மணப் பந்தல்களுமாகவே இருந்தன. யானை முதலிய சேனைகள் ஆங்காங்கே நிறைந்திருந்தன. பல வகை மங்கள வாத்தியங்கள் வீதிகளில் முழங்கின. குடிகள் எல்லாம் குதூகலத்தோடு உயர்ந்த ஆபரணங்களால் தங்களை

அலங்கரித்துக் கொண்டு அங்கும் இங்கும் கலியாணத்தைக் காணவேண்டி அழகாக விளங்கினார்கள்.

கலியாணத்திற்கு முன்னே நடக்க வேண்டிய சடங்குகள் முறைப்படி நடந்தன. இராமன் உயர்ந்த ஆடையாபரணங்கள் தரித்து மணப்பந்தலில் நுழைந்தான். விசுவாமித்திரர் வஸிஷ்டர் முதலியோர் ஓமம் வளர்த்தி மந்திரங்களைச் சபித்தனர். மணப் பந்தலின் இடையில் மேடையொன்று போடப்பட் டிருந்தது. அதில், மலர்கள் பரப்பிப் பாலிகைகளும், தீர்த்தக் குடங்களும், தீபங்களும், அருக்கிய அட்சதைகளும் நிறைத்து வைக்கப்பட்டிருந்தன.

சீதையை நவமணிகள் இழைத்த நகைகளாலும், பல வர்ணப் பட்டாடைகளாலும், மணம் வீசும் மலர்களாலும் அலங்கரித்து இராமன் முன்பாகக் கொண்டு நிறுத்தினார்கள். அக்கினி அருகில் எரிந்து கொண்டிருந்தது. அங்கிருந்தவர்கள் அனைவரும் தம்பதிகளைக் கண்டு, 'இதல்லவா மணக்கோலம். இவளன்றோ மலரினின்று நீங்கியவள். இவனன்றோ கடலினின்று நீங்கியவன்' என்று கொண்டாடினார்கள்.

அப்போது சீதையின் தந்தையரான சனகர், இராமனைப் பார்த்து, "இதோ! என் கண் மணியான சீதை நிற்கிருள். உனக்குகந்த ஒவ்வொரு தருமத்தையும் உடனிருந்து நடத்த இவளை உனக்குத் தானம் செய்கின் றேன். உனது கையால் இவளது கையைப் பிடித்துக் கொள். இவள் கற்பில் சிறந்த வள். அன்பில் மிகுந்தவள். உன்னை விட்டு ஒருநாளும் பிரியமாட்டாள். இவளுடைய சேர்க்கையால் உனக்கு நன்மை யுண்டாகக் கடவது" என்று சொல்லி, இராமன் கையில் நீரை வார்த்தார். அப்போது பூமழை பொழிந்தது. துந்துபி முழங்கிற்று. இருடி கள் மங்களம் பாடினர். வானவர்கள் வாழ்த்தினுர்கள். பெண்கள் ஆலம் எடுத் தார்கள்.

இராமன் சீதையின் கையைப் பிடித் துக் கொண்டு அக்கினியை மூன்று முறை வலம் வந்தான். பெண்ணின் பெற்ருேருக் கும், பிள்ளையின் தாய் தந்தையருக்கும் அக் காலத்துண்டான ஆனந்தத்தின் அளவை எவரே சொல்ல வல்லவர்! கலியாணம் சம்பிர மாக முடிந்தது. பிறகு தசரதர் சனகரிடம் விடைபெற்று, பெண்ணையும் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு தம் பரிவாரங்கள்

முன்னும் பின்னும் தொடர்ந்து வர, அயோத்திக்கு வந்தார். கோசலை தன் குமாரனுக்கும், மருமகளுக்கும் ஆலத்தி யெடுத்து அரண்மனைக்குள் அழைத்துப் போய் அகம்மகிழ்ந்தாள். அப்பால் அவ் ஊரில் உள்ளவர்கள் ஒவ்வொருவராகத் தம் பதிகளைக் காணவந்து கொண்டே இருந்த னர். அரண்மனையில் எங்கும் ஒரே கூட்ட மாக விருந்தன. வந்தவர்கள் எல்லாம் சீதை யின் பேரழகினைப் பற்றிப் பேசிக்கொண்டே யிருந்தார்கள்.

இராமனும், சீதையும் உடல் வேருயி னும் உயிர் ஒன்ருகக் காதலித்து, இல்லற தருமத்தை நடத்தி இன்பமுற்று வந்தார் கள். இராமன் தன் தந்தையைத் தெய்வ மாகப் பாவித்து வந்தான். அவர் சொல்லும் வார்த்தையை, "தந்தைசொல் மிக்க மந்திர மில்லை" என்றெண்ணி நடப்பான். தன் தாயிடத்து மிகவும் பணிவுடனிருப்பான். சிற்றன்னைகளிடத்தும் பக்தியுடன் அவர்க ளிடும் பணியை அன்புடன் செய்வான். பெரியவருக்கும், மற்றப் பிராமணருக்கும் பிரி யம்போல் நடப்பான். குருவின் கட்டளை யைத் தவருமல் செய்து முடிப்பான். காலை மாலை ஆகிய இரண்டு வேளைகளிலும் தன்

தம்பிமார்களோடு உல்லாசமாக உலாவி வருவான். தம்பிமார்களிடத்து எல்லை யற்ற அன்புகொண்டு எப்போதும் பிரியாதிருப்பான். தன்னிடம் வரும் குடிகளினுடைய சேமலாபங்களை அடிக்கடி அன்புடன் விசாரணை செய்வான். அவர்கள் விரும்புவதைக் கேட்டு, அவ்வாறே நடத்தி வைக்கிறேனென்று தைரியம் சொல்லுவான்.

சீதையோ, மாமி மாமனுருக்கும், மற்றவருக்கும் செய்யவேண்டிய கடமைகளைச் சீராய்ச் செய்வாள். பெரியோரைக் கண்டால் பணிவாள். முனிவரைக் கண்டால் போற்றுவாள். தன் கணவனுடைய மனோபாவங்களைத் தன் மனத்தால் உணர்ந்து அவ்வண்ணம் நடப்பாள். அவள் அன்பு கொள்ளுவதில் அன்னையைப் போலவும், பணிவிடை செய்வதில் வேலைக்காரியைப் போலவும், பொறுப்பதில் பூமியைப் போலவும், புத்தி சொல்வதில் மந்திரியைப் போலவும், வடிவத்தில் தேவமங்கையைப் போலவும் விளங்கித் தன் கணவனுக்குச் சொல்லொணாத ஆனந்தத்தைக் கொடுப்பாள். இவளைக் கொண்டாடாதவர்களே அப்பட்டணத்தில் கிடையாது. இவளுடைய மாமன் மாமியார், தம் மருகியைப் போலும் மற்றொருத்தி

கிடைப்பது அருமை யென்றும், நாயகன், "மனையாள் என்னும் வார்த்தைக்குப் பொருள் இவளல்லால் வேறொருவரில்லை" என்றும்; உறவினர்கள், 'இவளே இக் குலத்தை விளக்க வந்த குலக்கொழுந்து,' என்றும், நாட்டார், 'நம் நாடு செல்வம் தழைக்க வந்த செல்வ மகள்; கும்பிடும் தெய்வம்' என்றும் வாயாரச் சொல்லி வந்தார்கள். தேவர்கள் இக் கற்பின் நல்லாள் என்று தமது துயரைப்போக்க வெளிப்புறப் படுவாளோ வென்று சீதையைப் போற்றிக் கொண்டிருந்தார்கள்.

சீதை வனம்புகுதல்

இராமனும் சீதையும் ஒருவிதமான குற்றமுமில்லாமல் பூவில் மணம்போல் ஒத்து வாழ்ந்தார்கள். ஆயினும், அச்சுகம் வெகு நாள் நீடித்து நடைபெறவில்லை. சுகதுக்கங்கள் அடிக்கடி மாறுபட்டு வருவது இவ்வுலகில் இயல்பல்லவா? தசரதருக்கு முதுமைப் பருவமானதால், தம் குமாரனாகிய இராமனுக்குப் பட்டம் கட்ட நினைத்து, தம் மந்திரிகளோடு ஆலோசனை செய்தார். அவர்கள் எல்லாம் சந்தோஷித்து அப்படியே ஆகட்டு மென்றார்கள். அப்போது வஸிஷ்டர், "தசரத! இராமன் இனிய

குணங்களுக் கெல்லாம் இருப்பிடமானவன். மனவலிக்கும், புயவலிக்கும், மற்றவர்களுக் கெல்லாம் தலைவனானவன்; தகுந்த வயதை அடைந்தவன். இராமன் மகுடம் பெறுவது என்றால் யாவர் தாம் வேண்டாம் என்று மறுத்துச்சொல்லுவர்? இராமன் பட்டம் பெறுவது இந்நாட்டார் முன் செய்த பாக்கியமே யாகும்" என்றார்.

அதற்குள் மகுடாபிஷேகத்திற்கு வேண்டுவனவாகிய முயற்சிகள் எல்லாம் சித்தமாயின. பட்டணம் எங்கும் சந்திரனைக் கண்ட கடல்போலும் ஆரவாரம் மிக்கது. தெருக்கள் எல்லாம் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. கொடிச் சீலைகள் தொங்கிக் கொண்டிருந்தன. நகரமெங்கும் தண்ணீர் தெளிக்கப்பட்டிருந்தது. தரை யெல்லாம் புஷ்பங்கள் நிறைந்து மெத்தை விரித்தது போலு மிருந்தது. எங்கும் வாத்தியங்கள் ஒலித்துக்கொண்டிருந்தன. மேன்மாடிகள் தோறும் சங்கீத வித்துவான்கள் பாடிக் கொண்டிருந்தார்கள். அவ்வூரிலுள்ளவர்கள் எல்லாரும் இங்ஙனம் மகிழ்ச்சி அடைந்திருக்க, மகுடாபிஷேகத்திற்கு முன்னாள் சீதையும், இராமனும் முறை தவறாமல் விருதங்காத்துப் பிரமனை வணங்கினார்கள்.

தசரதருக்குக் கோசலையே பட்ட மஹிஷியாகும். மற்றைய கைகேசியும், சுமித்திரையும் அன்புள்ள மனைவியரே யாவர். கோசலையின் வயிற்றில் பிறந்தவன் இராமன். கைக்கேயிக்குப் பரதன் பிறந்தான். சுமித்திரைக்கு இலக்குமணன், சத்துருக்கினன் என இருவர் பிறந்தார்கள். கோசலையின் குமாரனுகிய இராமன் பட்டம் அடைவது கைகேசிக்குச் சம்மதமில்லை. தன் பிள்ளை பரதனே அப்பட்டம் பெறவேண்டும் என்பது அவள் எண்ணம்.

ஒரு சமயம் தசரதர் சம்பராசூரனுடன் பெரும்போர் செய்தார். அப்போது அவர் அவனுடைய பாணத்தால் காயமடைந்து கஷ்டப்பட்டார். பின்பு கைகேசி செய்த உபசரணையால் அவர் சுகம் அடைந்தார். அதனுல் அவர் அவளிடம் மிகுந்த அன்பு கொண்டு, அவளுக்கு இரண்டு வரங்களைக் கொடுப்பதாக வாக்களித்திருந்தார். கைகேசி, இப்போது இதனைத் தசரதருக்கு ஞாபகமூட்டிப் பரதனுக்குப் பட்டம் கட்டவேண்டுமென்றும், இராமனைப் பதினுன்கு வருஷம் காட்டிற்கு அனுப்பவேண்டும் என்றும் சொன்னுள். தசரதருக்கு இராமன்மேல் அன்பு அதிகம். இராமனைத் தன் உயிரினும்

சிறந்ததாக எண்ணுபவர். இவ்வுலகம் சூரியன் இல்லாமல் இருக்கவும் கூடும். தான் மட்டும் இராமனைப் பிரிந்து ஒரு கணமும் உயிர் வைத்து வாழ இச்சியார். இராமனைக் காணாத நாளை அவர் நல்ல நாளாக எண்ணுவதே கிடையாது. கைகேசி சொன்ன வார்த்தை அவருக்குக் கோபத்தை யுண்டாக்கிற்று. அவருக்குத் தான் கொண்ட கோபத்தை அடக்க முடியவில்லை. அவளை மனம்போன படி திட்டினார். கீழே விழுந்து புரண்டார். கண்களில் நீரைப் பெருக்கினார். பிறகு அவர் சற்றுத் தேறி 'திட்டிப் பயன் என்ன? நாம் தருமத்தில் இருந்து தவறுவது பிசகு. அவள் கேட்ட வரத்தைத் தருவதாய் வாக்களித்துவிட்டுப் பின்னர் அதைத் தடுத்து மாட்டேன் என்பது சரி அன்று. ஆகவே இவளுடன் நல்ல வார்த்தை சொல்லி, அவ்விதமான கொடிய செய்கை வேண்டாமென வேண்டிக் கொள்ளுவதே தகுதி. இல்லாவிடில், நமது வார்த்தை பயன்படாது' என மறுபடியும் பலவிதமான இத வசனங்களைச் சொல்லி இராமன் வனம் போவதை மட்டும் தடுக்க முயன்றார். அவருடைய வார்த்தைகள் எல்லாம் கடலில் கரைத்த காயம்போலாயிற்று. கைகேசி ஒரே பிடிவாதத்துடன்

தான் சொன்னது நடந்தே தீரவேண்டு மென்று சாதித்தாள்.

இங்ஙனம் நடந்து கொண்டிருக்கையில், இராமன் கைகேசியின் அரண்மனையினுள் வந்தான். அங்கே பூமியில் புரண்டு கொண்டிருக்கும் தந்தையைக் கண்டான். அங்கு நடந்துள சங்கதி அறிந்தான். கீழே அலங்கோலமாய் விழுந்து கிடக்கின்ற தந்தையைப் பார்த்து, "தந்தையே! இவ் வல்ப விஷயத்தில் தாம் மனக்கலக்க மடையலாமோ! தங்களுடைய இஷ்டப் படியே செய்கிறேன். தம்பியாகிய பரதனுக்கு இந்த அரசாட்சியே அல்லாமல், எது வேண்டினும் கொடுக்கத் தடையில்லை. தகப்பன் சொற்படி நடப்பதினும் தனயன் செய்யவேண்டிய தருமம் யாதுளது? நல்ல குமாரனுக்கு இதனினும் மேலான கருமம் என்ன? ஏன் இவ்வளவு தூரம்? என் சிற்றன்னையாரே எனக்கு இக்கட்டளையை இட்டிருக்கலாமே. என் சிற்றன்னையின் வார்த்தையை நான் ஒருநாளும் தள்ளி நடப்பவன் அல்லவே. இப்போதே நான் இவ் வயோத்தியை விட்டுப் போகிறேன்" என்று தன் தந்தையாரையும் சிற்றன்னையையும் வணங்கி வெளியில் வந்தான். அப்போது

இராமன் முகமானது மிகவும் பிரகாசமாக விருந்தது.

அரண்மனையின் உட்புறத்தில் இருந்த சீதை ஓடிவந்து இராமனைப் பணிந்து, அவன் பட்டம் தரித்து வந்ததாய் நினைத்து, "என் துணைவரே! தங்களுக்குப் பட்டாபிஷேகம் ஆயிற்றா? அங்ஙனமாயின், தங்களுடைய வெண்கொற்ற குடை யெங்கே? தேரெங்கே? யானை யெங்கே?" என்று கேட்டாள். இராமன் மிகுந்த சந்தோஷத்துடன் சற்றும் மயங்காது, "சீதா! என் தந்தையார் என்னைக் காட்டிற்குப் போவென்றார். நான் இதோ போகிறேன். நான் திரும்பிவரும் வரையில் நீ மனம் வருந்தாமல் உன் மாமிமார்களுக்குப் பணிவிடை செய்துகொண்டு இங்கேயேயிரு" என்றார். சீதை அதை முதலில் விளையாட்டென்று நினைத்துச் சிரித்தாள். பிறகு இராமனுடைய முக வேறுபாட்டால் உள்ளம் வெதும்பினாள். இராமன் கானகம் போவதைப்பற்றி அவள் வருந்தவில்லை. பட்டத்தை இழந்து விட்டாரே என்பதைப் பற்றிப் பரிபவப்படவில்லை. "நீ மனம் வருந்தாமல் இங்கேயே யிரு" என்று சொன்ன சொற்கள் காய்ச்சிய ஈயத்தைப் போலும் அவள்

காதில் நுழைந்து மனத்தைப் புண்ணுக்கின. 'தன் இயல்பை அவர் நன்ருகத் தெரிந்தவராக இருந்தும் கணமேனும் தான் அவரைப் பிரியாததை உணர்ந்தவராக இருந்தும் அவர் அங்ஙனம் சொல்லியது ஏன்?' என்று அவள் மனம் திடுக்கிட்டது. உடனே அவள், "நாதா! என்ன! ஒரு நாளும் சொல்லாத வார்த்தையை இன்று சொல்லினீர்? என்னைத் தனியாக விட்டுச் செல்லத் தங்களுக்கு நான் எவ்விதமான குற்றத்தைச் செய்தேன்? உயிர் நீங்க வுடல் தரித்திருக்குமோ? தங்களுக்கு என்மேல் ஏற்பட்ட அருவருப்பு என்ன? தாங்கள் எங்குப் போனுலும் நானும் வருவேன். சிற்றன்னையார் தங்களைக் காட்டுக்கு அனுப்பியது என்னையும் அனுப்பியதேயாம். தாங்கள் காட்டில் துன்பம் அடைய, நான் மாத்திரம் நாட்டில் இன்பம் அடைவதா? என்னை என் தந்தையார் உமக்குத் தாரை வார்த்துக் கொடுக்கும் சமயத்தில் சொன்ன வார்த்தையை நீர் மறந்து விட்டீர் போலும். ஆகையால், நான் உம்முடன் வருவதே என் கடமையாகும். தாங்கள் இல்லாமல் எனக்கு வீடு கிடைப்பினும் விரும்பேன். கணவன் இல்லாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? கணவன்

இல்லாத காரிகை பிணத்திற்குச் சமான மாவாள்” என்று மிகவும் இரங்கிய குரலுடன் சொன்னாள். அவள் முகமானது சூரியனை இழந்த தாமரையைப் போலக் குவிந்தது. கண்களினின்றும் மாலை மாலையாக நீர் வடிந்தது. இளங்கொடி போன்ற அவளுடைய தேகம் உடனே வாடியது. மேல் வார்த்தை சொல்ல முடியாமல் வாய் தழதழத்தது. பேசுவாள் போல விம்முவாள்.

இராமன், “சனகன் புதல்வீ! நான் உன்னைவிட்டுப் போவது உன்மீது வெறுப்பு கொண்டல்ல. என் ஆவியைப் பிரியலாகுமெனினும், நான் உன்னைப் பிரிதலாகுமோ? காட்டில் நீ வந்தால் படப்போகும் துன்பம் அதிகம். உன்னால் கல்லினும், முள்ளினும், மேடு பள்ளத்தினும் நடக்க முடியாது. காய் கனி கிழங்கு இலை இவைகளை உண்டிருக்க வியலாது. காற்றிலும் மழையிலும் குளிரிலும் வெயிலிலும் என்னுடன் திரிவதற்கு முடியாது. பசியையும் தாகத்தையும் நீ தாங்கமாட்டாய். ஓடைத் தண்ணீரை உள்ளங்கையில் ஏந்திக் குடிக்கவும் மாட்டாய். ஊளையிடும் நரி முதலியவைகளினுடைய குரலைக் கேட்டுப் பயப்படுவாய். துஷ்ட விலங்குகளைக் கண்டு நடுங்குவாய். அரக்கர்களைக் கண்டு

அலறுவாய். மானைக் கண்டு மயங்குவாய். மலைகளைக் கண்டு மருளுவாய். அந்தகாரத்தைக் கண்டு அச்சமடைவாய். இவைகள் தானே? இன்னும் எவ்வளவோ துன்பங்கள் இருக்கின்றன. நீ இவற்றுள் ஒன்றையும் இது வரையில் அனுபவித்தவள் அன்று. துக்கமென்பது இன்னதென அறியாயே. நீ என்னுடன் வருகிறேன் என்று சொல்வது தகாத காரியம்” என்றான்.

இராமன் சொல்லி வந்த ஒவ்வொன்றும் சீதைக்குத் தைரியத்தைக் கொடுத்ததே அல்லாமல், ஒன்றும் அவளுக்கு அச்சத்தைக் கொடுக்கவே யில்லை. அவள் கண்ணில் நீரைப் பெருக்கிக் கொண்டே, “அன்ப! நான் தங்களுடன் இருப்பின் கஷ்டம் என்னும் வார்த்தைக்குப் பொருள் தானுண்டோ? நீர் சொல்லிய ஒவ்வொன்றும் எனக்கு இன்பம் அளிப்பனவாகவே தோன்றுகின்றனவே அல்லாமல் ஒன்றும் என் வரையில் துன்பத்தைக் கொடுப்பனவாகத் தோற்றவில்லையே. காட்டில் தங்களுடன் காய் கனி தின்னுதல் தேவாமுதம் உண்ணுதலை யொக்கும். தங்களுடன் இருப்பதே தேவலோகம். தங்களைப் பிரிந்திருப்பதே நரகமாகும். நான் தங்களுக்கு

மாலை யிட்டபோது, சுகம் நேரிடினும், துன்பம் நேரிடினும் தங்களைப் பிரிவதில்லை என்று உறுதிப்படுத்தியதினின்றும், இன்று சங்கடம் வந்தபோது தம்மை விட்டுப் பிரிவேனே? தாங்கள் நடந்து செல்ல நான் வழியை முன்னே சென்று முள் பொறுக்குவேன். தாங்கள் பசித்தில்லாதபடி காய் கனிகளைத் தேடிவந்து உதவுவேன். தாங்கள் மனச் சோர்வு அடையாதபடி சமயம் வந்தபோது தைரிய வார்த்தைகள் சொல்லுவேன். தாங்கள் தூங்குகையில் நான் விழித்திருப்பேன். சொன்னதையே மறுபடியும் திருப்பிச் சொல்லுவதினால் பயனென்ன? ஒரு விநாடியும் தங்களை விட்டு இருக்கமாட்டேன் என்பதை உறுதியாக நம்புங்கள். நீங்கள் என்னைவிட்டுச் சென்றால் என் உயிர் எமனுக்கு விருந்தாகும். நான் இங்ஙனம் உயிரை விடுவது சம்மதமாக இருந்தால் தாங்கள், ஒருவிதமான தடையும் இல்லாமல் செல்லலாம்" என்றாள். உடனே அவள் தேகம் நடுங்கிற்று. கண்களில் நீர் வழிந்தது. பெருமூச்சு வந்தது. அசைவற்று நின்றாள். இவற்றை எல்லாம் கண்டான் இராமன். மனம் தாளவில்லை. அவன் கண்களும் கலங்கிற்று.

உடனே சீதையைச் சமாதானம் செய்து, “நீயும் என்னுடன் வரலாம்” என்று சொன்னான். அச் சொல் சீதையினுடைய துக்கத்தைப் போக்கியது. சந்தோஷத்தைத் தந்தது. அவள் ஒருநாளும் அடையாத ஆனந்தத்தை அடைந்தாள். உடனே முகத்தில் நகை யுண்டாயிற்று. அவள் நாட்டின் இன்பத்தைக் கருதவில்லை. காட்டின் துன்பத்தைத் துன்பமாக எண்ணவேயில்லை. கணவனுடன் இருப்பதே சுகமென நினைத்தாள். இத்தகைய குணமன்றோ கற்புடைய மாதர்களுக்குச் சுபாவமான இயல்பு. என்ன துன்பம் நேரிடுவதாயினும் புருஷனுடன் இருப்பதே சிறந்த வாழ்க்கை. புருஷன் இல்லாமல் எவ்வளவு இன்பம் இருப்பினும் அவைகள் எல்லாம் பயனற்றதேயாகும்.

உடனே சீதை தான் அணிந்திருந்த உயர்ந்த ஆடையாபரணங்களை யெல்லாம் கழற்றி எறிந்துவிட்டுத் தாழ்ந்தவுடையுடன் இராமன் போக்கைப் பின்பற்றத் தயாராக விருந்தாள். இராமன் இலக்குமணனுக்குச் செய்தி தெரிவித்தான். அது கேட்டு அவன் கோபத்தால் கொதித்தான். கையில் வில்லையும் வாளையும் எடுத்து எழுந்தான். தாய் தந்தையரைக் கோபித்தான். பாதனை

வெறுத்தான். கைகேசியின் வாக்கிற்குத் துடித்தான். வாய்ச்சொல் பதறினான். இராமனைப் பார்த்து, "பட்டத்தை யுனக்கு நாளைக்கட்டுவேன். எதிர்த்தவர்களின் ஆயுளைப் போக்குவேன்" என்று கூறினான். கரை காணாத் துயரத்தில் துளைந்தான். அவனுடைய கோபத்தை எல்லாம் இராமன் அடக்கித் தானும் சீதையும் செல்லுவதாகச் சொன்னான். உடனே அவன் தான் அணிந்திருந்த உயர்ந்த ஆடை ஆபரணங்களைக் கழற்றி வீசினான். தாழ்ந்த சீரையைத் தரித்தான். "நான் உன்னைவிட்டு அரைக் கணமும் இங்கு இருக்கமாட்டே" னென்று அண்ணனைப் பின் தொடர்ந்தான்.

அதன்மேல் இராமன், தான் காட்டிற்குச் செல்வதைத் தன் தாய்க்குச் சென்று தெரிவித்தான். அவள் கன்றுக்கு இரங்கும் பசுபோலக் கதறி யழுதாள். தன் மருகியைக் கண்டு மனமுருகினாள். "கண்ணே! சீதா உன்னுடைய அலங்கோலமான ஆடையைப் பார்க்க என்னாவி துடிக்கின்றதே! அந்தோ! இதுவும் உன் திருக்கூத்தோ! அரசன் மகளாகப் பிறந்து அரசர் குலத்தே புகுந்தும் உன் விதிவலி இத்தகைத்தோ? நீ இந்நகரை விட்ட

பின்னரும் இந்நகருக்குப் பொலிவுண்டோ? போற்றுவா ருளரோ! உனது தந்தை யாருக்கு இச்செய்தி தெரிந்தால் உள்ளம் வெடிக்காதோ? உன்னைப் பத்துத் திங்கள் சுமந்து பெற்ற செல்வத்தாயார் உன்னைக் கண்டால் உயிர்விடாளோ?" என்று சொல்லிக் கண்ணில் கல நீருகுத்தாள். உறவினர் எல்லாம் ஒன்று சேர்ந்து துக்கித்தார்கள். ஊரிலுள்ளவர் எல்லாரும் ஆங்காங்குக் கும்பலாகக் கூடி, 'இதென்ன அநியாயம்! இதென்ன வரசாட்சி! நமதரசன் எங்ஙனம் மனமுவந்து இவ்விதமாகத் தெரிவித்தானோ! அன்றி எல்லாம் அக்கைகேசியின் சூழ்ச்சியாகத்தானிருக்குமோ'' என்று தேம்பினார்கள். கைகேசி ஒருத்திக்கே இவர்கள் காட்டிற்குப் போவது களிப்பைக் கொடுத்தது.

இராமன் தந்தையையும் தாயையும் வணங்கினான். பெரியோரைக் கண்டு பணிந்தான். அப்பால், அவர்களிடத்திலே விடை பெற்றுக் கொண்டான். இலக்குமணர் முன்னே செல்ல, சீதைபின்னேவர, இராமன் அரண்மனையை விட்டுப் புறப்பட்டுக் கால் நடையாய் நடந்து அந்நகரைக் கடந்தான். அவர்கள் போக்கைக் கேட்ட அந்நகர மாந்-

தர் அனைவரும் துள்ளித் துடித்தார்கள். முனிவர்களும் தமது நிலைமைமாறி மனங் கரைந்து மதிமயங்கினார்கள். அயோத்தியும் ஒளி குறைந்தது. அரண்மனை எல்லாம் அவசப்தமே அதிகரித்தன. ஒவ்வொரு நாளும் கோஷிக்கும் மங்கள வாத்தியங்கள் எல்லாம் அடங்கின.

வனத்தில் இருப்பு.

இராமனும், இலக்குமணனும், சீதையும் கங்காநதியைத் தாண்டினார்கள். அப்பால் அவர்களுக்கு முன்னே ஒரு அடர்ந்த காடு காணப்பட்டது. அதில் அவர்கள் நுழைந்தார்கள். அங்கே பலவிதமான காய்கனிகள் அகப்பட்டன. அவற்றைத் தின்று பசியாறி அன்றெல்லாம் நடந்தார்கள். சூரியன் அஸ்தமிக்குந் தருணத்தில் ஓர் மரத்தடியிற் சென்று, இரவைக் கழித்தார்கள். ஐந்தடுக்கு மாளிகையில் அன்புள்ளவர்களெல்லாம் சூழ்ந்திருக்க, நல்லுணவுண்டு இன்பமாக வாழ்ந்துவந்த அவர்களுக்குக் காட்டில் தனிமையாகவே காய் கனிகளைப் பறித்துத் தின்று காலத்தைப் போக்குவது மிகவும் கஷ்டமாக விருந்தது. ஆயினும் பழகப் பழக அக்கஷ்டம் குறைந்து, கொஞ்சநாளையில் காட்டின்வாழ்வே உயர் வாழ்வாகத்

தோன்றிற்று. உண்பதற்குச் சுவை மிகுந்த கனிகளும்; உறங்குவதற்குப் பச்சென்ற புல்லும், குடிப்பதற்குச் சில்லென்று தண்ணீரும், கண்ணுற்கண்டு ஆனந்தமடைவதற்குப் பலவகையான விநோதங்களும் கிடைத்தபோது, அவர்களுடைய துயரமும் நிலைத்து நீடித்திருக்குமோ? அவ்விதமான பல காட்சிகளைக் கண்டு ஆனந்தமாகவே தங்கள் நாட்களை அவர்கள் கழித்து வந்தார்கள்.

கொஞ்சநாள் சென்றபின் அவர்கள் யமுனா நதிக்குத் தென்கரையிலுள்ள சித்திரகூட மலைக்குச் சென்றார்கள். அம்மலையின் அடிவாரத்தில் அழகிய குடிசை ஒன்று கட்டிக் கொண்டார்கள். அக்குடிசையின் அருகாமையில் ஒரு சிங்காரத் தோட்டம் தமது கைவன்மையால் அமைத்தார்கள். அதில், பலவிதமான வாசனை கொடுக்கும் புஷ்பச் செடிகளை வைத்துப் பயிராக்கினார்கள். குடிசையின் ஒருபக்கத்தில் விற்களும் அம்புப் புட்டிலும் தொங்கிக் கொண்டிருக்கும். மான் தோலும், புலித்தோலும் குடிசையின் உட்புறத்தில் கீழே பாய்போல விரித்திருக்கும். எப்போதும் குளிர்ந்த காற்று வீசிக்கொண்டே யிருக்கும். சீதை

தினந்தோறும் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவாள். குடிசையைக் குப்பைபோக்கிச் சுத்தமாயும், அழகாயும் வைத்திருப்பாள். குடிசையின் வெளிப்பக்கத்தில் மான்களைக் கட்டிவைத்தும், கிளிப்பிள்ளைகளை வைத்தும் வளர்த்து வருவாள். சில சமயங்களில் மான்களுடன் விளையாடுவாள். சிலசமயங்களில் கிளிப்பிள்ளைகளுக்கு மொழி பயிற்றுவாள். இராமன் வேட்டையாடுவதிலும், கனிகளைத் தேடுவதிலும் கழியும் நேரம்போக மற்றைய நேரத்தைச் சீதையுடன் உல்லாசமாகக் கழிப்பான்.

இலக்குவன் அண்ணிக்குக் காவல் புரிவதிலும், அண்ணனுக்கு உதவிசெய்வதிலுமே தனது காலத்தைப் போக்குவான். இடையிடையே தன் அண்ணனுக்குச் சிற்றன்னைசெய்த கஷ்டத்தை நினைத்துக் கலங்குவான். தான் இவ்வாறு கலங்குவதை அண்ணன் அறிந்தால் தம்மை வெறுப்பானே என்று அச்சமடைந்து துயரத்தைத் தானே அடக்கிக் கொள்ளுவான். அண்ணியின் துயர நிலைமையைக் கண்டு அகங்கரைவான். 'ஆகா! ஒருநாளும் இல்லாததும், நினையாததுமான இக்காட்டில் அவதிப்பட நேர்ந்ததே' என்று மன முருகுவான்.

'அப்பால் தனக்குள் சமாதானம் செய்து கொண்டு, நாம் இவர்களுக்கு உதவி செய்யக் கொடுத்து வைத்தோமே' என்று சந்தோஷ மடைவான்.

இப்படியாக இருக்கும்போது, ஒருநாள் கைகேசியின் அருமை மகனுன பரதன் இராமனிடம் வந்தான். இராமன் பரதனைக் கண்டு, "அடா என் செல்வமே! நீ நாட்டையும் தந்தையாரையும் விட்டுவந்த சங்கதி என்ன?" என்றான். பரதன் அடியற்ற மரம்போல் அண்ணன் அடியிணையில் விழுந்தான், அழுதான், தொழுதான், கதறினன், மூர்ச்சை யடைந்தான். இராமன் அவனை எடுத்து உட்காரவைத்து அவனுடைய கண்ணீரைத் துடைத்தான். அவன் ஒன்றும் சொல்லாமலே முன்னிலும் நூறுமடங்கு அதிகமாக அழத்தொடங்கினன். இராமன் அவனைச் சமாதானப்படுத்தி, "தம்பீ! பரதா! என்ன விசேடம்? எதற்காகத் துயரடைகின்றனை? நீ என் இக்கோலத்துடன் காட்டிற்கு வரவேண்டும்; நீ தனிமையாக வரத் தந்தை எப்படி அனுமதி கொடுத்தார்? அரசனாகிய நீ இங்கு வருதல் தகுமோ? நமது அருமைத் தந்தை சுகமாக விருக்கின்றாரா? என்றுசாவ, பரதன் மறுபடி

யும் பூமியில் விழுந்து தேம்பியழுதான். அப்போது இராமனுக்கு ஒன்றும்தோன்றவில்லை. சற்று ஆலோசித்து, "பரதா, நீ ஏன் மறுபடியும் புலம்புகின்றாய்? உண்மையைச் சொல். நீ அழுவதைப் பார்த்தால் ஏதோ விசேஷம் இருக்கவேண்டும். பகைவர்களால் துன்பமுண்டோ? நமது தந்தையார்க்கு யாதும் குறைவில்லையே" என்றான் இராமன்.

அது கேட்ட பரதன் கண்களில் நீர் ஆறாயோடிற்று. அவன் ஏதோ சொல்லுவதற்கு முயன்றும் வாயெழவில்லை. எதையோ நினைப்பவன்போல நிற்பான். தன் அண்ணனைப் பார்த்துத் தலை குனிப்பான். பெருமூச் செறிவான். வானை நோக்குவான், வள்ளலே என்பான். இராமன் மறுபடியும் "தம்பீ, உற்றதை ஒளியாதே! உண்மையைச் சொல்" என்றான். அவன் அழுதவாறே, "அண்ணா! நம் அருமைத் தந்தையார் தங்களைப் பிரிந்த துயரத்திற்கு ஆற்றாமல் அன்றே ஆவிதுறந்தார். தாங்களோ இக்காட்டில் நாள்கழிக்கின்றீர். அந்தோ! இவ்வளவு பெரிய கஷ்டத்திற்கும் காரணம் என் அன்னையே அல்லவா? அவள் தான் செய்த வினைக்கீடாகக் கைம்பெண்ணாகக் கவல்கின்றாள். தாங்கள் அடியேன்மேல்

கிருபைசெய்து என்னுடன் வந்து அரசாட்சியை ஏற்றுக்கொள்ள வேண்டும். இனி தங்களை விட்டுப் போகேன். தாரணியை மதியேன். தங்களுடனே நானும் வனத்திருந்து வாழ்வேன். நாட்டின் நலத்தைச் சிந்தியேன். காட்டின் கஷ்டத்தைக் கஷ்டமெனக் கனவிலும் கருதேன். நான் இவ்வளவு தூரம் வந்ததற்குக் காரணம் தங்களைக் கொண்டு செல்லவே" என்று சொன்னான்.

இராமன் அவன் சொன்ன வார்த்தைகளைச் செவியில் ஏற்றுக்கொள்ளவே யில்லை. ஆனால், "தந்தையார் காலஞ்சென்றார்" என்னும் சொல் மாத்திரம் அவன் உள்ளத்தை வருத்தியது. உடனே அவன் அறிவு மயங்கிற்று. சித்தங் கலங்கியது. அடியற்ற மரம்போலத் தரையில் விழுந்தான். தந்தையே! தந்தையே! என்று அழுது மூர்ச்சையானான். இலக்குமணனும் சீதையும் ஓடிவந்து, தூக்கி உட்கார வைத்தார்கள். இராமனுக்குக் களை நீங்கிற்று. அப்பால் இராமன், பரதா! தந்தை இறந்தாரா? நாம் கைவிடப் பட்டோமா? நான் அவருக்கு மகனாய்ப் பிறந்தென் பயனாயிற்று. இறக்குஞ் சமயத்தில் அருகில் இருந்து ஆதரவு செய்யாது பாவியானேனே! என்னை அன்

புடன் கூவி அழைப்பவர் யாவருளர்? ஓ சீதா! உன் மாமனுர் மண்ணுலக வாழ்க்கையை வெறுத்தார். தம்பி இலக்குமணு! நீ தந்தையற்றவன் ஆகிஞய்! இனி யாரை நாம் அப்பாவென் றழைப்பது. யார் நாம் அயோத்திக்குச் சென்ருல், 'குழந்தாய்' என உள்ளம் குளிர வழைக்கப் போகின்ருர்கள் என்ருன்.

அதுகேட்ட அவ்விருவரும் கதறத் தொடங்கினுர்கள். காடெல்லாம் அழுகை சப்தமே மேலிட்டது. வெகுநேரம் வரையில் அழுகை ஓயவில்லை. பிறகு சற்றுப்பொறுத்து ஓய்வுண்டாயிற்று. இராமன் தந்தைக்குச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்தான்.

அதன் பிறகு பரதன் அரசைக் கைக்கொள்ளுமாறு இராமனை வேண்டினுன். இராமன், "தம்பீ! நான் பெற்ருேரிடம் ஒப்புக்கொண்டு வந்த வார்த்தையை மறுத்து நடவேன். அவர்கள் வார்த்தையை மீறி நடப்பது அதருமமாகுமே! பெற்ருேர் கட்டளைப்படி நடப்பதே பிள்ளைகளுக்குக் கடமையாகும். நான் வரையறுத்த நாள் கடந்து பின்புதான் நாட்டிற்குத் திரும்புவேன் என்ருன். இராமன் பிடிவாதத்தைப் பார்த்தான் பரதன். அவனுக்கு இன்னது

செய்வதெனத் தோன்றவில்லை. பின்பு அவன் பாதக்குறடுகளை வாங்கிக்கொண்டு, அவன் பேரால் தான் அரசை ஆளுவதாகச் சொல்லி அயோத்திக்குத் திரும்பினான். பரதனுடன் வந்தவர்களும் இராமனைக்கண்டு வந்தார்கள்.

பரதன் போனபிறகு இராமனுக்குச் சித்திர கூடத்தில் இருக்க மனம் பிடிக்க வில்லை. தந்தை இறந்தசெய்தி கேட்டுத் தவித்தவிடம் இதன்றோ? ஆகவே அவ் விடம் அடிக்கடி துக்கத்தை மூட்டும் என்று நினைத்து மற்றோரிடம் போகநிச்சயித்தான். இராமன் தன் தம்பியுடனும் மனைவியுடனும் புறப்பட்டுப் போகும்போது, அத்திரி முனி வர் தவஞ் செய்துகொண் டிருப்பதைக் கேட்டான். உடனே அவரைத் தரிசிக்க அங்குச் சென்றான். அவர் தளர்ந்த வய துடையவர். வெளுத்த மயிருள்ளவர். கூன் விழுந்த முதுகினர். நீண்ட சடை யுடையவர். கூர்மையாகச் சுருண்ட நகங் களை யுடையவர். செறிந்த மயிருள்ள புருவமுடையவர். அவர் மனைவி அநசூயை. அவள் கணவனே கடவுளென்று போற்று பவள். பெண்களுக்குப் பதிபக்தியே சிறந்த தருமம் என்று நினைப்பவள். அவளது தலை

நரைத்திருந்தது. தேகம் உலர்ந்திருந்தது. நெற்றியில் கோடுகள் விழுந்திருந்தது. கண்களிரண்டும் குழிந்திருந்தன. மேனி வெளுத்திருந்தது. மகிதலத்து மாதர்களுள் இவளை போலும் வேறொரு பெண்களும் இருப்பார்களோ என்று சொல்லும்படியாக கோரமாய்த் தென்பட்டாள்.

இராமலட்சுமணர் அம்முனிவர் திருவடியில் பணிந்தார்கள். அவர் அவர்களை அன்புடன் உபசரித்தார். அவர்கள் வரவிற்கு காரணத்தைக் கேட்டார். உம் வரவு எம் போலியர்களுக்கு நல்வரவே என்று சொன்ணர்.

அநசூயை சீதையை உட்காரும்படிச் சொன்னுள். சீதை உட்காராமல் கொஞ்ச நேரம் நாணத்துடன் தலைகுனிந்து நின்ருள். அநுசூயை, 'குழந்தாய்! நீ பதிபக்தியில் சிறந்தவள் என்பதை அறிந்தேன். நீ உன் உறவினரையும், மித்திரரையும், சகல ஸம்பத்தையும் பொருட்படுத்தாமல் கணவனுடனே காட்டிற்கு வந்தாய் எனக் கேள்விப்பட்டேன். உன்னிலும் உயர்ந்தவர்கள் இல்லை என்று உளம் குளிர்ந்தேன். உத்தமப் பெண்களின் இலக்கணத்தை உன்னிடம் கண்டேன். சீதா! சுகம் வந்தாலும்,

துக்கம் வந்தாலும் கவனியாமல் கணவனுடன் கூடியிருப்பவளே பெண்ணாவாள். பெண்ணுக்குக் கடவுளாவது புருஷன் அன்றிப் பிறிது என்ன வுண்டு? புருஷரைப் பூசித் தொழுகும் பூவைகள், எல்லாவிதமான சுகத்தையு மடைந்து தேவலோக வாழ்க்கையைப் பெறுவார்கள். புருஷனை அல்லும் பகலும் இடைவிடாமல் தூஷணை செய்து கொண்டிருக்கும் பெண்கள் குடும்பத்தைப் பாழாக்கிப் படுநரகில் விழுவார்கள். உன்னைப் போன்ற பெண்களாலன்றோ இவ்வுலகம் நிலை நிற்கிறது' என்றாள்.

அதற்குச் சீதை, "அம்மா! உத்தமிகளுக்கு உரிய உயர்வான குணங்கள் என்னிடம் இருக்கின்றதோ இல்லையோ அதை நான் அறியமாட்டேன். என்னுயிருக் குயிரான கணவன் அல்லாமல் நான் ஒரு விநாடியேனும் உயிர் தரியேன் என்பது ஒன்றைத் தான் அறிவேன். என் கணவனே எனக்கரிய வருங்கலம். என்னரிய வுயிரும், கடவுளு மவரே. என் தந்தையார் கலியாண காலத்தில் சொல்லிய சொற்கள் என் உள்ளத்தில் பதிந்துவிட்டன" வென்றாள்.

அவ் வார்த்தையைக் கேட்ட அநசூயைக்கு ஆனந்த முண்டாயிற்று. அக்கற்

பாசி சீதையைத் தடவி முத்தமிட்டாள். உன்னைப் போலும் பெண்களிருப்பின் இவ் வுலகம் ஈடேறிப் போகும். உன் பெருமை உனக்குத் தெரியாது. உன்மீது எனக்கு அன்பு அதிகரிக்கின்றன. உன்னைக் கலியாணஞ் செய்து கொண்டவன் உத்தம புருஷனே யாவன். அவன் பெருமைக்கு அழிவே கிடையாது. இதோ இவ்வாடை, ஆபரணம், மாலை, குங்குமம் முதலியவைகளை நீ அணிந்து கொள். எக்காலத்தும் உன திளமை சிதையாது. அழகு குலையாது என்று ஆசீர்வதித்தாள். சீதை அவற்றை மரியாதையுடனும் அன்புடனும் வாங்கிக் கொண்டு, "தாயே! தாங்கள் அன்புடன் அளித்தவைகளை அடியேன் அணிந்து கொள்வேன். நான் அழகையும், யௌவனத்தையும் ஒரு பொருளாக எண்ணவில்லை. ஆயினும், நான் சிறு பெண்ணாக விருப்பது என் கணவனுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும் ஆகையால், தங்கள் இஷ்டப் படியே ஆகட்டும்" என்றனள். அப்புறம் அவர்கள் முனிவரையும் அநசூயையையும் மற்றுமொரு தடவை வணங்கி, அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு தண்டக வனத்தினுள்ளே நுழைந்தார்கள்.

## தண்டகவனச் சிறப்பு.

தண்டகவனம் என்பது சித்திரகூட மலைக்குத் தென்பாகத்தில் இருக்கும் ஒரு பெரிய காடு. அதைத் தண்டகன் என்பவன் ஆண்டுவந்தான். அதில் வானளாவிய மலைகளும், அம்மலைகளின்மேல் ஓங்கி வளர்ந்து அதனுச்சியை மூடிய மரங்களும், வெகு தூரத்தில் இருந்து காண்பவர்களுக்குக் கடல் அலைபோலக் காணும் குன்றுகளும் தொடர்ச்சியாகச் சூழ்ந்து நெருங்கி எப்போதும் இருண்டு இருக்கும். அம்மலைச் சாரல்களில் காறாறுகளும், பள்ளத் தாக்குகளும், நீர் நிலைகளும் நிறைந்திருக்கும். கணக்கற்ற பூங்கொடிகள் பூத்துக் கண்களைக் கவரும். நாற்புறமும் காணப்படும் வெளிகள் ஆகாயப் பரப்பையும் தோற்கடிக்கும். மந்தாகினி ஆறு இங்கு பாம்பைப் போல் வளைந்து வளைந்து ஓடிப் பாயும். நீர் நிலைகள்தோறும் தாமரை செங்கழுநீர் புஷ்பங்கள் மலர்ந்து இருந்தன. சக்கரவாகப் பறவைகளும், செங்கா லன்னங்களும், நீர் காக்கைகளும் நீந்திக்கொண்டிருக்கும். யானைக் கூட்டங்களும், வரிப் புலிகளும், கரடிக் கூட்டங்களும், காட்டெருமைகளும் எங்கும் திரிந்து கொண்

டிருக்கும். நீர்த் துறைகளின் அருகாமையில் மாவுரியும், முப்புரி நூலும், முக்கோலும் பிடித்துக் குசப்புல்லைக் கீழே பரப்பியுட்கார்ந்து பல முனிவர்கள் தவஞ் செய்வார்கள். வண்டுகள் இடைவிடாமல் ரீங்காரஞ் செய்து கொண்டிருக்கும். மான்கள் துள்ளி விளையாடும். பறவைகள் ஒரு மரத்தின் கிளையிலிருந்து மற்றொன்றுக்குத் தாவியோடுவதும் பாடுவதுமாகவே இருக்கும். கிளிகள் பழங்களைக் கோதிக்கொண்டிருக்கும்.

இராம லட்சுமணரும், சீதையும் தண்டக வனத்திலிருக்கும் விந்திய மலையின் ஓரமாகவே நடந்தார்கள். வெகுதூரம் சென்றவளவில் கோதாவரி நதியைக் கண்டார்கள். அந்நதியின் கரையின்மே லிருக்கும் பஞ்சவடியைப் பார்த்து ஆனந்தம் அடைந்தார்கள். இதுவே தாங்கள் வசிப்பதற்குத் தகுதியான விடமென்று நிச்சயித்தார்கள். அங்கு மூங்கிற் கால்கள் நட்டு, மண் சுவர் வைத்து மேலே புல்லை அடர்த்தியாகப் பரப்பி ஒரு குடிசையைக் கட்டினார்கள். அருகாமையில் கோதாவரி ஓடுவதாலும், காய் கனிகள் விசேஷமாகக் கிடைப்பதாலும் அவ்விடம் அவர்களுக்கு மிகவும் சௌக்கியமாக விருந்தது. எப்போதும் சில்

லென்னும் காற்றுப் பையப் பைய வீசிக் கொண்டே யிருந்தது. சீதை குடிசையைச் சுற்றித் தோட்டம் அமைத்துப் பூஞ்செடி வைத்தாள். ஒவ்வொரு தினமும் காலையில் எழுந்த வுடனே சீதை கோதாவரிக்குச் சென்று குடத்தில் நீர் கொண்டுவந்து செடி களுக்கு வார்ப்பாள். அச்செடிகளில் புஷ் பிக்கும் புஷ்பங்களை மாலையாகத் தொடுத் துத் தன் கணவன் செய்யும் பூசைக்குக் கொடுப்பாள். தன்னால் வளர்க்கப்பட்டு வரும் மான்களுடன் விளையாடுவாள். கிளிக ளுடன் விநோதமாகப் பேசுவாள். தன் கணவனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் சோம்பல் இல்லாமல் செய்வாள். ஆங்கு வரும் முனிவர்களை உபசரிப்பாள். இவ்வித மாகவே சீதை தன்னுடைய காலத்தைக் கழித்து வந்தாள். இராமனும் இலக்குவ னும் அவ்விடத்தில் இருக்கும் இயற்கை வனப்பை எல்லாம் இடைவிடாமல் பார்த் துத் தமது நாளை இன்பமாகக் கழித்தார்கள். ஆயினும் அவர்கள் அனுபவித்து வந்த இன்பம் அதிக காலம் நீடித்து நடக்க வில்லை. துன்பங்கள் கடலின் அலைகளைப் போல ஒன்றின்மீது ஒன்றாகத் தொடர்ந்து வரலாயின.

ஒருநாள் அண்ணன் தம்பி இரண்டு பேரும் காட்டில் வேட்டையாடச் சென்றிருந்தார்கள். அச் சமயத்தில், நெடிய உருவமும், பருத்த புயமும், அகன்ற மார்பும், உருண்ட கால்களும் உள்ள ஒருவன் வந்தான். அவன் கண்டத்தில் உருத்திராட்ச மாலை தரித்திருந்தான். காலில் பாதக்குறடு போட்டிருந்தான். இடுப்பில் காவி வஸ்திரம் உடுத்தியிருந்தான். கையில் கமண்டலம் வைத்திருந்தான். கக்கத்தில் தடியும் வைத்திருந்தபடியினலே தவசிபோற் காணப்பட்டான். அப்போது சீதையானவள் மஞ்சள் நிறச்சேலை அணிந்து குடிசையின் தாழ்வாரத்தில் உட்கார்ந்து தன் கணவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். மனமாசற்ற சீதை அந்தத் துறவியின் வரவைக் கண்டவுடனே எழுந்து கால் கழுவத் தண்ணீர் கொடுத்தாள். அவர் கால் கழுவியவுடனே, அவரை உட்காரும்படிச் சொல்லிக் காய் கனி கொண்டுவந்து உண்ணும்படி வேண்டினாள். உபசாரங்களைச் செய்து ஒரு புறமாக நின்றுகொண் டிருந்தாள்.

வந்த சன்னியாசி கீழே உட்காரவில்லை. மரியாதையாகக் கொடுத்த பழங்களை உண்ணவில்லை. அவர் உடனே எதிரே

நின்று கொண்டிருந்த சீதையைப் பார்த்து, "பெண்ணாருங்கலமே! நான் இவ்வுலகில் அநேக பெண்களைப் பார்த்திருக்கிறேன். உன்னைப் போல வடிவழகியைக் கண்டதில்லை. உன் அழகினுக்குத் தேவமாதரும் ஒப்பாக மாட்டார்கள். நீ கொடிய அரக்கர் வாழும் இங்கே தனிமையாக வந்ததின் காரணமென்? இக்காட்டு மிருகங்கள் உனக்குப் பயமுண்டாக்கவில்லையோ? நாட்டில் வாழும் நல்லழகுடைய நீ காட்டில் வாழ்தல் தகுதியானதோ? இது என்ன பரிதாபமான காரியம். உன் நலத்தையும் இளமைப் பருவத்தையும் ஏன் வீணே பாழாக்குகின்றாய்? என்னைச் சந்நியாசியாக எண்ணாதே! நான் சாமான்ய பரதேசியன்று. நான் அரக்கர்களுக்கு எல்லாம் அரசன். என் பெயர் இராவணன். என் வல்லமை அறியாதவர்கள் இவ்வுலகத்தில் எவருமில்லை. நான் வசிக்கும் இடம் கடலின் மத்தியில் இருக்கிறது. அது நால்வகை மதில்களால் சூழப்பட்டது. மனிதர்கள் அணுக வொண்ணாதது. தேவர்களும் என் பெயர் சொல்லுவதற்குப் பயப்படுவர் என்றான்.

உடனே சீதை அவர் சந்நியாசி அன்று எனத் தெரிந்துகொண்டாள். புலிக்குப்

பயந்த மானைப்போல நடுங்கினாள். நாணத்தால் தலைகுனிந்து ஒருபுறமாக ஒதுங்கினாள். அந்தோ! இனி என்னதீமை நேருமோ வென்று மனங்கலங்கினாள். அப்போது அத்தீயன் சீதையைப் பலவிதமாகத் தன்னுடன் வரும்படி வேண்டினான். அவனுடைய சொற்கள் சீதையின் உள்ளத்தைப் புண்படுத்தியது. அவள் தன்னையும் மறந்து மனம்போனவாறே திட்டத் தொடங்கினாள். இராவணனுக்குக் கோப முண்டாயிற்று. கண்களில் தீப்பொறி சிந்தின. பற்களை நெறநெற வெனக் கடித்தான். நாற்புறமும் சுற்றிப் பார்த்தான். ஆங்கு ஒருவரையும் காணவில்லை. உடனே சீதையின் மேனியை தீண்டாமல் பூமியுடன் பேர்த்து எடுத்துக் கொண்டு ஆகாய மார்க்கத்தில் விசையாகக் கிளம்பிச் சென்றான். சீதை ஓவென்று அலறி யழுதாள். இங்கு என்னைக் காப்பவரில்லையே என்றேங்கினாள். அப்போது சடாயு என்னும் கழுகரசன் எதிரே வந்து அவ் விராவணனுடன் போர் செய்யத் தொடங்கினான். பின்பு இராவணன் வாளாயுதத்தால் இறகுகள் அறுபட்டு பூமியில் விழுந்தான். துன்பத்தால் அக்கழுகரசன் துடித்து உயிர் விட்டான்.

இங்ஙன மிருக்கையில், வேட்டை யாடச் சென்றிருந்த இராமன் தம்பியுடன் குடிசைக்குத் திரும்பி வந்தான். அப்போது சீதை அங்கு காணப்படவில்லை. உடனே இராமன் மனம் மிகுந்த துயரத்துள் ஆழ்ந்தது. ஒருகால் சீதை வன விலங்குகளின் வாய்க்கு இரையாகிவிட்டனளோ அல்லது கொடியவர்களால் எடுத்துப் போகப்பட்டனளோ வென்று சந்தேகம் அடைந்து பல விடங்களிலும் தேடத் தொடங்கினான். சீதையின் உண்மை புலப்படவில்லை. இராமன் தன்னை துக்க மிகுதியால் மறந்தான். தரையில் விழுந்து புரண்டான். உன்னைக் காட்டில் பரிகொடுக்க வா அழைத்து வந்தேன் என்று கதறினான். அவள் பிரிவால் ஆகிய துக்கம், மேலும் நெய்விட்ட நெருப்பைப் போல் அதிகரித்தது. என் செய்வேன் ? என் அருமைச் சீதை ஆருயிர் துறந்தாள். நான் இன்னும் இறவாமல் உயிர் வைத்திருக்கிறேன். தம்பீ ! இம்மலை அடிவாரத்தில் நானும், என் நாயகியும் உட்கார்ந்து எத்தனை முறையோ பேசி இன்புற்றோமே. இவ்வாற்றங் கரையில் எத்தனை முறையோ உல்லாசமாக உலாவித் திரிந்தோமே. இவ்வனங்களில் எத்தனையோ

தடவை பூக்கொய்து முடித்து மகிழ்ந்தோமே. என்னுயிரினும் இனியாள் எவ்வண்ணம் தன்னுயிர் துறந்தனளோ தெரியவில்லையே, அந்தோ! அவள் இறந்தவிடந் தெரியுமாயின், நான் அங்கு அவள் நேத்திரங்களுக்கு ஒப்பான கருங்குவளையைக் கொண்டுவந்து மாரியைப்போல் பொழிவேனே. அவளுடைய பற்களுக்குச் சமானமான முல்லை மலர்களைப் பறித்து அணிஅணியாகப் பரப்புவனே. முகத்தையொத்த செந்தாமரையைக் கொண்டுவந்து தூவுவேனே. மேனியை ஒக்கும் பசுமையான இளந் துளிர்களைப் பறித்துவந்து இறைப்பேனே" என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டுத் துடித்தான். அவன் மனங் குன்றியது. அறிவு மயங்கிற்று. கண்களில் நீர் அருவிபோற் பெருகியோடியது. இலக்குமணன், "அண்ணா! இதென்ன ஆச்சரியம். எல்லாம் அறிந்த தாமே இத் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு இல்லாவிடில், எளியவனான என் போன்றவன் கதியென்ன? ஊழி பெறினும் உள்ளங் கலங்காத நீர் இவ்வண்ணம் கலங்குவது அழகாகுமோ? அழல் வேண்டாம். அண்ணிக்கு யாதொருவிதமான தீங்கும் நேராது.

நெருப்பினிடத்தில் ஈ நெருங்குமோ? வெகு சீக்கிரத்திலேயே வந்து சேர்வார். இவ்வுலகில் இன்பமும் துன்பமும் மாறிமாறி ஒவ்வொருவருக்கும் வருவது இயற்கை. விதியைக் கடக்க விண்ணவராலும் முடியாது. அரிச்சந்திரன் துன்புறவில்லையா? நளன் நாடிழந்து காடுவந்து கலங்கவில்லையா? பாண்டவர் பரிதபிக்கவில்லையா? ஆயினும் நல்லோர்க்கு அது நாள் பட்டு இருப்பதில்லை. ஆகவே வேதங்களை ஓத்த சான்றோர் என்னவிதமான துன்பங்கள் நேரினும், மனக்கலக்கம் அடையார் என நான் அறிவேன். தைரியத்தையுடையவனே மனிதன். அத்தைரியத்தை இழந்தவனே மண்பாவை என நான் உம்மிடம் கேட்டிருக்கின்றேனே? இப்படியெல்லாம் மனவல்லமையுள்ள நீரே தைரிய லக்ஷ்மியை விட்டு விட்டால் சாமனியர்கள் எங்ஙனம் வாழ்வார்கள்?" என்றான். உடனே இராமன் தம்பி கூறிய தைரிய வார்த்தைகளால் மனம் ஒருவாறு சாந்தமடைந்து இருந்தான்.

அதன் பிறகு அவ்விருவரும் சீதையைத் தேடிச் செல்லப் புறப்பட்டு, அக்காட்டின் தென்பாகத்திற்கு வந்தனர்.

அங்கே வானரத் தலைவனான சுக்கிரீவன் காணப்பட்டான். அவனை இராமன் அஞ்சனை புதல்வனாகிய அனுமானால் சினேகம் செய்து கொண்டான். இச் சிறுவருடைய துன்பத்தை அறிந்த அவன் மிகவும் துக்கித்தான். எவ்விதமான பிரயாஸத்தை எடுத்துக் கொண்டாயினும் சீதையைத் தேடி வருகிறேன் என்று வாக்களித்தான். பிறகு தன் வானரப் படைக்குத் தேட உத்திரவு செய்தான். அவர்கள் ஒவ்வொருவராகத் தனித்துச் சென்றும், கும்பல் கும்பலாகக் கூடிச் சென்றும் தேடலானார்கள்.

## அசோகவனம்

சீதை ஒரு மரத்தின் அடியில் பல இராக்கதப் பெண்கள் சூழ ஒளி இழந்த முகத்துடன் வியசனப்பட்டுக்கொண் டிருந்தாள். அவளது துயரத்தை அங்கே போக்குவார் இல்லை. ஆனால் சீதையைப் பயமுறுத்தப் பலபேய்கள் உட்கார்ந்து கொண்டிருந்தன. அவைகள் எல்லாம் கொஞ்ச நேரத்திற்குள்ளே தூக்கத்தால் உறங்கி விட்டன. சீதைக்குத் தூக்கம் வரவில்லை. அவள் மட்டும் தனிமையாகக் கண் விழித்துக் கொண்டு, "ஐயோ இந்தச் சண்டாள இராவணன் என்னைத் தூக்கிவந்து சிறையில் இருத்தித் தன்

இஷ்டம்போல் நடவென்று பயமுறுத்துகின்றானே! என் அருமை நாதனைத் தவிர மற்றவர் முகத்தை ஏறெடுத்துக்கூட பாராத எனக்கு இக்கேடு சம்பவித்தல் தகுதியோ? இக்கடுமையான சிறையினின்றும் தப்பும் மார்க்கம் நேருமோ? ஓ என் பிராணபதே! இவ்வேழைப் பெண்ணின் துயரக் குரல் தமது செவிக் கெட்டவில்லையோ? அப்படி எட்டியும் என்னை ஏனென்று கேட்க மனமில்லையோ? நான் காட்டிற்கு வரவேண்டாமென்று சொல்லுகையில், நான் வந்துதான் தீருவேன் என்று பிடிவாதமாக என்னைத் தொடர்ந்து வந்தாளே என்னுங் கோபத்தாலே என்னை மறந்தீரோ? கணவனைவிட்டு அந்நியன் இடமிருப்பது காரிகைக்கு அழகன்றே? நான் பேதையாயிற்றே? ஆயினும் நான் என்ன செய்வேன்? எவ்விடம் போவேன்? எவ்வகையில் தப்பித்துக் கொண்டு உம்மைக் காண்பேன்? இதுவோ என் தலைவிதி! இதுவோ நான் முன் பிறப்பில் செய்த வினை? இதுவோ என் கதி?" என்று இவ்வாறு ஒருநாள் இலங்காபுரியிலுள்ள அசோகவனத்தில் தானே கலங்கிக் கொண்டிருந்தாள்.

அப்போது சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். நக்ஷத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. இனிய தென்றல் காற்று சில்லென்று வீசிக்கொண் டிருந்தது. எங்கும் நல்ல வாசனை கமழ்ந்தது. மரங்களின் நிழலைத் தவிர மற்ற விடங்களிலெல்லாம் பால்போல நிலவு விளங்கிற்று. அவ்வனத்தின் ஒருபக்கத்தில் ஆகாயத்தளவும் உயர்ந்த மலையொன்று சிகரங்களுடனே தோன்றியது. அம்மலையின் மேலே இருந்து, விசாலமான நதியொன்று மாலைபோல அருவியிட்டு வீழ்ந்து கொண்டிருந்தது. அதன் அடியில் இருந்து அநேக ஓடைகள் தெளிந்த வெள்ளத்துடன் சலசலவென்று சப்தம் செய்துகொண்டு ஓடின. ஒரு பக்கத்தில் நீர் நிறைந்து, தாமரை விரிந்து ஆம்பல் குவிந்து கிடக்கும் தடாகங்கள் தங்கப்படி வைத்த துறைகளுடன் துலங்கின. வானத்தில் விளங்கும் சந்திரன் ஒளியால் அத் தடாகங்கள் தகதகவென்று சொலிக்க, தன் கணவன் வரவைக் கண்ட ஆம்பல் வாய் திறக்க, நீர்க்குள் பல்லாயிரம் மின்னல் கொடிகள் தோன்றின. சிற்றலைகள் ஒன்றையொன்று மோதிப் பிடிப்பது போலும் வீசிக் கொண்டிருந்தன. மரஞ் செடி

கொடிகளின் மலர் எங்கும் விசேஷமாக உதிர்ந்து மலர் மெத்தையே அவ் வனமெல்லாம் விரித்து வைத்தாற்போல் இருந்தது. அங்கங்கே ஜலக்கிரீடை மண்டபங்கள் இருந்தன. நான்கு பக்கங்களிலும் புஷ்பச் செடிகள் புதுமை புதுமையாக வளர்ந்திருப்பதும், மலர்க் கொடிகள் நானு வர்ணங்களுடையதாய் படர்ந்திருப்பதும் கண்ணிற்கு பேரானந்தத்தை விளைத்தது. அங்கே கணக்கிட முடியாத பறவைகள் உல்லாசமாகப் பாடிக்கொண்டு அங்குமிங்குந் திரிந்துக் கொண்டிருந்தன. மான்கள் மட்டும் பயந்து தலை தூக்குவதும் ஓடுவதுமாகவே அலைந்து கொண்டிருந்தன. வன விலங்குகள் அரக்கர் வருவாரோவென்று பயந்து தமது சுபாவத்தை மறந்து பதுங்கி ஒரே இடத்திலேயே இருந்தன. தேவர்கள் மரங்கள் உலர்ந்து போகாதபடிக் கிணறுகளினின்று தண்ணீர் எடுத்து ஊத்திக் கொண்டேயிருந்தனர். சூரியன் அதிகமாகக் காய்ந்தால் செடிகள் வாடி விடுமே; அது தெரிந்தால் இராவணன் நம்மை வருத்துவனே என்று குளிர்ச்சியாகவே பிரகாசித்தான். வாயு வலிவாக அடித்தால் இராவணன் நம்மைச் சிறைப் படுத்துவானே என்று மெல்லிதாக வீசி மரங்களை அலையவொட்டாமல் காத்திருந்தான்.

இப்படிப்பட்ட வனத்தில் அசோக மரத்தடியிலே ஒரு ஏழைப் பெண் உட்கார்ந்து இருந்தாள். அவள் கிழிந்தும் அழுக்கேறியும் உள்ளதான ஒரு மஞ்சள் நிறம் பொருந்திய சேலை ஒன்றை அரையிலே தரித்திருந்தாள். அவள் தேகம் மிகவும் வாடி இளைத்திருந்தது. முகம் வெளுத்துத் தோன்றிற்று. கண்கள் ஒளி மழுங்கிப் புருவங்கள் துவண்டிருந்தன. தலை மயிரோ சிக்குப்பிடித்து முழந்தாள் வரையில் நீண்டு புரண்டது. அவளது தங்கத்தை யொத்த மேனி புழுதியால் போர்க்கப்பட்டுக் காண்பதற்குப் புகை மூடிய நெருப்புப்போலும் விளங்கியது. கோரமான அரக்க மாதர் அவளைச் சூழ்ந்து கொண்டிருந்தார்கள். அவ்வரக்கியர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அவலக்ஷணங்களுடன் காணப்பட்டார்கள். அக்கூட்டத்துள் விளங்கும் அப்பெண்மணி பல காகங்களின் இடையிலே விளங்கும் அன்னப் பறவையைப் போலத் தென்பட்டாள். அப்போது அவளது நிலைமையானது ஒரு புலிக் கூட்டத்தின் நடுவில் அகப்பட்டுக் கலங்கிக் கொண்டிருக்கும் மானைப் போல விருந்தது.

அவள் பேசி முடித்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஒரு பெரிய மலைபோன்றவன் வந்தான். அவன் தலையில் இரத்தின முடி தரித்தும், கழுத்தில் மாலை யணிந்தும், இடையிலே பீதாம்பர முடுத்தியும், உடம்பில் வாசனை பூசியும் இருந்தான். அவன் இடையில் பொற்கத்தி யொன்று தொங்கிற்று. காதில் குண்டலம் சொலித்தது. கையில் உடைவாள் இருந்தன. அகன்ற மார்பும், நீண்ட கழுத்தும், உருண்ட தோளும், துடித்த மீசையும், பருத்த தலையுமுள்ளவனாய்த் தோன்றினான். கண்கள் நெருப்பை யொத்துப் பார்வைக்குச் சிவந்து பயத்தைச் செய்தன. அவன் தருமத்தை உணராதவன் போலவும், தயை இல்லாதவன் போலவுங் காணப்பட்டானே அல்லாமல், தக்கோனாகத் தோற்றப்படவில்லை.

அவன் அவ்வேழைப் பெண்ணை நெருங்கி, "சீதா! என்மீது உனக்கு இரக்கம் இன்னும் உண்டாக வில்லையோ? இவ் வேழையின் மனம் இவ்வண்ணம் மாறுபட்டு அலையப் பார்ப்பது அழகோ? என்றான். அதற்கவள், "அடா! தரும சிந்தையற்ற இராவணா! விடு விடு கெட்ட எண்ணத்தை. வீணே அழிய இடந் தேடிக்கொள்ளாதே?

என் கணவனை அல்லாமல் பிறிதொரு பேயனை நான் எறிட்டுப் பாரேன்" என்று சொன்னாள். இராவணன் திரும்பவும் சிரித்துவிட்டு, அடி பேதாய்! நான் உன்னைக் கஷ்டப்பட்டுக் கொண்டு வந்ததினால் அடைந்த பலன் என்ன? என் எண்ணம் நிறைவேறவில்லை. நாட்கள் போய் மாதங்கள் வரலாயின. என் எண்ணமும் அதிகரிக்கின்றது. என் செய்வேன்? பழிக்கு அஞ்சுகின்றேன். வேதவதி சாபத்தைக் கவனிக்கின்றேன். எனக்கு மனைவியர் பலர் இருக்கின்றார்கள். ஆயினும் அவர்களை நான் பொருட் படுத்தவில்லை. உன்னை அன்றி வேறொருத்தியை நான் இனி விரும்பேன். உன்னையே தெய்வமெனக் கொண்டேன். சிறிது என்மீது கருணை செய்" என்றான்.

சீதை :— நீயும் ஆண் பிள்ளையாக நினைத்து என்னுடன் வார்த்தையாட புத்தியில்லாமல் வந்தனையே! உன்வாயை அடக்கு. கணவன் இல்லாத சமயம் பார்த்து என்னைக் கவர்ந்து வந்த கள்வா? காமப் பேய்பிடித்த காதகா? தருமம் உணராத தறுகண்ணாளா? சீ என்முன் நில்லாதே! உன்னுயிர் இருக்க வேண்டின் அகன்று செல்.

இராவணன்:—"நான் யார் என்று இன்னும் நீ நன்றாக அறிந்து கொள்ளவில்லை. என்னை உள்ளபடி அறிந்தாயானால், நீ இப்படியெல்லாம் பேசுவதற்குத் துணியமாட்டாய். உன்னைக் கவர்ந்து வந்தபோது இருந்த ஏழைச் சந்நியாசி அல்லன் யான். பெண்ணே! என்னை நிதானித்து நோக்கு. எனது தோள்வலியும், துணைவலியும், செல்வச் சிறப்பும் இவ்வுலகம் அறியுமே. என்னைக் கண்டால் தேவர்கள் தண்டனிடுவார்கள். அசுரர்கள் அடிபணிவார்கள். என்னிஷ்டத்தை மறுத்துச் சொல்லும் ஆண் பெண் இம் மூவுலகிலும் இருக்கின்றார்களோ? நீ உன் அதிர்ஷ்டத்தால் அன்றோ என் வசத்தில் வந்து சேர்ந்தாய்! இனி இவ்விலங்கை உனக்குரிமை யானதே! காய்கனி புணவை கனவிலும் நினையாதே! காணற்றின் நீரைக் குடிக்கக் கருத்திலும் வைக்காதே! மரப்பட்டை யாடையை மனத்திலும் நினையாதே? மற்றைய துக்கத்தை மறுபிறப்பினும் காணமாட்டாய். அவைகள் நீ என் கையில் சிக்கிய போதே ஒழிந்தன. என்னுடைய சகல போகங்களும் உன்னுடையதே! உனது கலியாண குணங்களுக்கு அவ்வற்ப மனிதனே தக்கவன்? அவனிடமுள்ள அன்பை விடு.

அகில வுலகமும் போற்றும் என்னைக் கௌர வப்படுத்து. நான் செய்த வீரச் செயல்களை எல்லாம் உன் காதால் கேட்டு ஆனந்தத்தை அடை" என்றான்.

சீதைக்கு முன்னிலும் துயரம் அதிகரித்தது. ஆனால் தைரியத்தை இழக்கவில்லை. மெல்லிய குரலுடன், "இராவணா! உன் துர்புத்தியை விட்டு நன்மையை நாடுவாய். நான் உத்தம குலத்தில் பிறந்தவள். உத்தம நடையினை யுடையவள். உத்தமனுக்கே வாழ்க்கைப் பட்டவள். என் உள்ளம் உருகும்படிச் செய்யாதே! உத்தமர்கள் உள்ளம் பேதித்தால் உலகமே பேதிக்கும். நான் என் கண்ணினும் சிறந்த கணவரை அன்றி மற்றொருவரைக் கனவிலுங் கருதேன். உனக்கு நற்புத்தி புகட்டும் நல்லவர்கள் இந்நாட்டில் ஒருவரும் இல்லையோ ? ஒருகால் இருந்தும் நீ தான் அவர்கள் பேச்சைக் கேட்கவில்லையோ ? "அறம் புகழ் கேண்மை பெருமை இந்நான்கும், பிறன் தாரம் நச்சுவார்ச் சேரா" என்பதை அறியாயோ! அந்தோ? உன் அழகிய நாடு உன்னால் கெட்டுவிடுமே. உன் நீண்ட ஆயுளும் அழிந்துபோகுமே. உன்னைச் சார்ந்தாரு மொழிவரே. உன் அறிவும் ஆண்மையுஞ் செல்வமும் என்னை மயக்க

வலியுளதோ? என் கற்பின் எதிர் நிற்குமோ? கணவனே தெய்வம்! கணவனே பொருள். கணவனே இன்பம். கணவனே அணிகலன். கணவனே எல்லாம் என்றுள்ள எனக்கு உன் பாக்கியங்கள் எம்மாத்திரம்? உன் எண்ணம் பேருழி கடந்தாலும் என்னிடம் பலிக்காது. உனக்கு மேன்மை வேண்டுமாயின் என்னை என் கணவரிடம் சேர்ப்பாய். என் கணவன் கடலனைய கருணையுடையார். அக் கடலாழத்தை யொத்த அன்புடையார். அபராதம் செய்தவர் அடைக்கலம் புகுந்தால் உடனே மன்னிக்கும் குணமுடையார். ஆகையால் உன்னை மன்னிக்கும்படிச் செய்கிறேன். வெள்ளம் வந்தபின் அணை போடுவதில் பயனில்லை. இல்லாவிடின் அவர் உன்னை எளிதில் விடார். வீணே அவர் கை பாணத்திற்கு இலக்காகாதே? காலனும் உன்னை விடலாம். என் கணவரிடமிருந்து நீ தப்புவது அருமை. இனி உனக்கு வரப்போவதைச் சொன்னேன்" என்றாள்.

இராவணன்:—என்னை மனம் நோகப் பேசாதே! எனக்கு உன்னை வருத்த மனமில்லை. இன்று முதல் இரண்டு மாதத் தவணைக்குள் என் சம்மதப்படி நடக்கவேண்

டும். இல்லையானல், உன்னைப் பெண் என்றும் பாராமல் என் கைவாளுக்கு இரையாக்கி விடுவேன். நான் சொல்லுவதைக் கவனித்துக் கேள். சீதா! உன் ஆணவத்தை நான் அறிகிறேன் என்று கூச்சலிட்டு அப்பால் சென்ருன்.

அனுமான் சீதையைக் காணல்

அசோகவனத்தில் சீதையின் அருகாமையிற் காவல்புரிந்த அரக்கியர்கள் அவளைப் பயப்படுத்தினர்கள். இராவணனை அவமானப்படுத்தியது அவர்களுக்குக் கோபமுண்டாகியது. ஒருத்தி, எனது கூர்மையான கோரப்பல்லுக்கு இவளை இரையாக்கிக் கொள்வேன் என்ருள். மற்ருெருத்தி, இவளுடைய அங்கங்களைச் சின்னபின்னப்படுத்துவேன் என்ருள். இன்ஞெருத்தி, இவள் ஊட்டியைக் கடித்து உதிரத்தை உறுஞ்சுவேன் என்ருள். மற்ருெருத்தி, இவள் மூக்கைக் கடித்து அழகைக் குறைப்பேன் என்ருள். துக்கத்தால் ஆழியினிடத்துத் துரும்பான சீதையோ, நடுநடுங்கி மனக்கலக்கத்துடன் வானத்தை நோக்கினுள். விண் மீன்களின் ஒளியும் வெள்ளிய நிலவும் அவள் துன்பத்தை அதிகரிக்கச் செய்தது. அவள் ஒன்றும் தோன்ருதவளாய் மனந் தத்தளித்

தாள். கண்களில் நீரைப் பெருக்கினுள். ஒரு மரத்தின் அடியில் ஓடி நின்ருள். தன்னுடைய கருமையான கூந்தலை கையில் பிடித்து, "அந்தோ! நான் பதிபத்தியுடையாளென்பதும், நற்குணவதி யென்பதும், பயனில்லாத சொல்லாயினவே! இனி நான் இவ்வுடலை வைத்திருப்பதால் அடையும் புகழென்? அழிப்பதினு லுண்டாகும் இக்ழ்ச்சிதானென்? நான் பதியே கதியென காட்டில் வந்து காய் கனி தின்று கடிய விருதம் இருந்துதான் என்ன பயன்? ஓ அன்பா! என் துயர் அறியீரோ? அறிந்தும் அறியாதவர்போல அடியனைப் பரீக்ஷை செய்கின்றீரோ? இது காலகதி யென்று சும்மா விருக்கின்றீரோ? அல்லது நான் இறந்தேன் என்று எண்ணி அயோத்திக்குச் சென்றீரோ? ஒருகால் தந்தையார் இறந்த துக்கத்தால் தமியேனை மறந்து விட்டீரோ? இக்கொடிய அரக்கியர் குடற்குத் தீனியாவதிலும், நானே என் கூந்தலைக் கயிருக்கித் தூக்கிட்டுக் கொள்ளுகின்றேன். என் உயிரான தாங்கள் என்னை அலக்ஷியம் செய்து விட்டபின் இவ்வுலக வாழ்வு இருந்தென்ன? துலைந்துதா னென்ன?" என்று கதறினுள். அவள் முகம் சாம்பிற்று. புரு

வங்கள் துவண்டன. கன்னங்கள் குழிந்தன, கைகால் துடித்தன. மனம் குழம்பின. கருக்கொண்ட மேகம் மதியை மூடிக்கொள்ளுவதை யொத்து, அவள் தோளின் மீதும் மார்பின்மீதும் தலைமயிர் விரிந்து மூடிப் புரண்டது. வனத்தில் இருக்கும் வண்டுகள் அத்தருணத்தும் நீ அஞ்சல் என்று தைரியம் சொல்வது போலத் தலைமயிரில் உட்கார்ந்து உட்கார்ந்து எழுந்து, அவளுடைய காதுக்கு அருகாமையிற் சென்று ரீங்காரம் செய்தன. சீதையோ தன்னைத் தானே மாய்த்துக் கொள்ளுவதாக உறுதிசெய்து கொண்டனள்.

அச்சமயம் அம்மரக்கிளையில் இருந்து “இராமா, இராமா, இராமா, என்னும் சொற்கள் சீதையின் செவியில் விழுந்தன. அவள் மனம் திடீரெனச் சந்தோஷம் அடைந்தது. பின்பு தான் கரத்தில் பிடித்திருந்த தலைமயிரைக் கீழே விட்டாள். நான்கு பக்கத்திலும் சுற்றிப் பார்த்தாள். அவள் எதிரே ஒரு சிவந்த குரங்கு உட்கார்ந்து கொண்டிருந்தது. அந்தக் குரங்கு சீதையின் அருகில் ஓடிவந்து, “அம்மா, நான் இராமனால் அனுப்பப்பட்ட சேவகன். என் பெயர் அநுமான் என்று சொல்லுவர். என் தலைவ

ஞகிய சுக்கிரீவன் கட்டளையால் உம்மை உலக மெல்லாம் தேடினேன். உமது தரிசனம் எங்கும் கிடையாமல் வருந்தினேன். திரும் பிப் போய் எஜமானனுக்கு என்ன சொல் வது என்று தியங்கினேன். கடைசியில் இங்கே வந்தேன். உமது வார்த்தையால் தாமே சீதாதேவி எனத் தேர்ந்தேன். அரக் கன் ஆற்றலைக் காண்பேன். அயன் அவ் வரக்கனுக்கு அளித்த நீண்ட நாளைத் தொலைப்பேன். தமது துயரத்தை இருந்த விடந் தெரியாமல் போக்குவேன்" என்றது.

திடீரென்று நன்மை வந்தாலும் தீமை வந்தாலும் அதை நாம் நம்பமுடியாதல்லவா? ஒரு கால் இவன் இராவணன் அனுப்பிய தூதோ? அல்லது அரக்கருடைய மாயத் தால் ஆகிய சூதோ? என்று சீதையின் மனம் சிறிது நேரம் எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணிச் சந்தேக மடைந்தது. சீதையின் உள்ளத்தைக் குறிப்பால் அறிந்த அனுமான் தன் மடியில் இருந்த ஏதோ ஒன்றை எடுத்துக் கொடுக்க, அவள் அதை வாங்கிப் பார்த்தாள். அது தன் கணவன் ஆழி எனத் தெரிந்தாள். அதனைத் தன் கண்களில் ஒத்திக்கொண்டாள். உடனே அவளுடைய துக்கம் நீங்கி முகம் குளிர்ந்

தது. கண்கள் தாமரை யன்னமலர்ந்தன. ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. அக் கணை யாழியைத் தன் கண்ணெதிரில் பிடித்து, "ஐயா! என் தலைவர் எங்குள்ளார்? எந் நிலையில் இருக்கின்றார்? அவரைத் தாங்கள் கண்ட தெங்கு? எனக்கு என்ன சொல்லி யுள்ளார்? இம்மோதிரம் அவரே கொடுத் ததா? என்னை எங்கெங்குத் தேடினார்? என்ன எண்ணம் எண்ணினார்? நான் வந்ததைப் பற்றி வருத்தப் படுகின்றாரா? நான் வர வேண்டும் வழி செய்கின்றாரா? எனக்கு எல் லாம் சொல்லவேண்டும். என் ஆருயிர் நண் பன் விஷயத்தை அறிய ஆவலுள்ளவளாக விருக்கின்றேன். என் மனம் ஆத்திரப்படு கின்றது" என்று கேட்டாள்.

அனுமான்:— "அம்மா? அவர்க ளுடைய துன்பத்தையும் பரிதாப நிலைமையும் நான் என்னவென்று சொல்வேன். உம்மைப் பிரிந்தது முதல் அவர்கள், உணவும், உறக்க மும் அற்று உருமாறி விட்டனர். அதில், இராமன் மிகவும் வேறுபட் டிருக்கிறான். உம்மை எங்கும் தேடிக் காணமல் இராமன் தன்னுயிரையும் மாய்த்துக்கொள்ள முயன் றானும்.

அயல் நின்ற தம்பியே அவனைச் சாந்தப்படுத்தினான். அப்போது சீதை கண்களில் நீரைப் பெருக்கி அழத் தொடங்கினாள். அனுமான், அம்மணி! அழாதேயும். பிறகு தம்பி இலக்குமணனுடைய வார்த்தையால் தைரியமடைந்து, உம்மைத் தேட ஆரம்பித்தார்கள். பின்பு என் தலைவன் சுக்கிரீவனை நண்பனாக்கிக் கொண்டார்கள். அச்சுக்கிரீவன் கிட்கிந்தைக்கு அரசன். வாலியின் தம்பி. வாலி இராமன் கை அம்பால் அமரர் லோகத்திற்கு அனுப்பப்பட்டான். அநேகம் ஆயிரம் வானரப் படைகளையுடையவன். நானே அச்சுக்கிரீவன் மந்திரி. அவன் கட்டளைப்படி, இராமனிடம் உமது அடையாளம் கேட்டு, இக்கணையாழியை வாங்கி எங்கும் அலைந்து தேடினேன். கடைசியில் இங்கு கண்டேன். இனி எனது துக்கம் நீங்கிற்று. உமது துயரம் தொலைந்தது. தேவர்கள் கஷ்டம் ஒழிந்தது. முனிவர்கள் இஷ்டம் பலித்தது. நான் போய் அவருக்குச் செய்தி தெரிவித்தவுடன், அவர் இவ்விடம் வந்து இராவணனை எமனுக்கு விருந்திட்டு உம்மை மீட்பார். இராமனுக்கு உம்மை அல்லாமல் கனவில் பிறிதொரு எண்ணத்தைக் காணேன். அவர் உறங்கும்

போதும் உமது நாமத்தையே சொல்லிக் கொண்டிருக்கிருர் ” என்ருன்.

சீதைக்கு இவ்வளவென்று சொல்ல முடியாத பேரானந்த முண்டாயிற்று. அவள் உள்ளம் பூரித்தது. உடம்பு பெருத்தது. முகம் மலர்ந்தது. கன்னங்கள் சிவந்தன. கண்கள் பிரகாசித்தன. ஆனல் சிறிது நாழிகைக்குள் கூம்பிய முகத்துடன், ‘ஐயா! நான் எப்போது என் தலைவரைக் காண்பேன்? அவர் என்று வந்து என்னை மீட்பார்? எந்நாள் இத்தீயநடக்கை யுடையான் ஆயுள் நாள் அழிவுறும். இராவணன் எனக்கு இரண்டுமாத காலம் தவணை தந்துளான். அத்தவணைக்குள் என்னை மீட்டுக் கொள்ளவேண்டும். இல்லாவிடில், நான் உயிரோடு இருக்கமாட்டேன். அத்தவணைக்குள் என் தலைவரை வரச் சொல்லும். நான் எவ்வளவு நாளாக இத்திய வாக்கியருக்குள் அகப்பட்டுத் துன்பம் உறுவேன். இங்கே என்னை ஆதரிப்பாரில்லை. அனதையான என்னுடைய! உண்மையான இருப்பை அவருக்குச் சொல்வீரோ? என் மனக் குறையை அவரிடம் மறுக்காமல் உரைப்பீரோ? மேற் கண்ட தவணைக்குள் என்னைச் சிறை மீட்கச் செய்வீரோ?’ என்று சொல்லிப் புலம்பினள்.

அநுமான் :- அம்மணி! "உமது கவலை தொலைந்தது. இராவணனுக்கு இறுதி காலம் சமீபித்தது. இலங்கை வாழ்ப் பெண்கள் வாழ்வு குறைந்தது. இராமன் கை யம்பு விரிந்தது. அரக்கர் தம் தலைவிதி கிழிந்தது. அண்ணலாகிய இராமன் புகழ் அகிலமெல்லாம் புகுந்தது என்று அறிவீர். நீர் அழவேண்டிய காரணமென்? இன்றே உன்னை இராமனிடம் கொண்டு போகமுடியும். இஷ்டமானால் இவ்விலங்கையை அடியோடு எடுத்துப்போய் என் ஐயன் முன்னே வைப்பேன். நீர் தயவுசெய்து என் முதுகின்மேல் ஏறிக்கொள்ளும், என் ஐயனைச் சுமக்கும் தோள்கள் உம்மைச் சுமக்கவும் இடங் கொடுக்கும். ஒரு விநாடியில் உம்மை இராமனிடம் கொண்டு சேர்த்து விடுவேன்" என்றான்.

தன் கணவனைக் காண சீதை துடிதுடித்தாளாயினும், அநுமான் தோளில் ஏறிச் செல்ல அவளுக்குச் சம்மதமில்லை. பதிவிருதா தருமத்தைச் சீதை நன்றாகத் தெரிந்தவளாகையால், எவ்வாறாயினும் அநுமான் பிறனேயாகும். கணவன் தவிர மற்றொருவர் மேல் கைப்பட்டு அறியாத அக்கற்பரசி அநுமான் தன்னைக் கொண்டு

செல்ல மனமொப்புவளோ? ஆகவே சீதை, "ஐயா! தங்கள் அன்பின் மிகுதியை அறிந்து சந்தோஷம் அடைந்தேன். தங்களுடன் வருவது எனக்குத் தகுதியன்று. அத்தீயன் தான் என்னைக் கள்ளத்தனமாக கவர்ந்து வந்தான். அந்நாய் நினைத்ததை ஒப்ப நீயும் என்னைக் கொண்டுபோக நினைப்பது தருமமன்று. என் அன்பர் வந்து என்னை அழைத்துப் போவதே அழகாகும். நான் இப்படிச் சொன்னேன் என்று மனதில் வருத்தம் கொள்ளல் வேண்டாம். வீண் தாமதம் செய்வதில் பயனில்லை. நாட்களோ எண்ணிச் சுட்ட பணியாரமாக விருக்கிறது. தாங்கள் திரும்பிப் போய் அவரைத் துரிதமாக அனுப்பும். அவர் வருமளவும் இம் மோதிரமே எனக்குத் துணை" என்றாள். அனுமான் மிகவும் வணக்கத்துடன் அப்படியே ஆகட்டுமென்று விடைபெற்றுப் புறப்பட்டுச் சுக்கிரீவன் இருப்பிடத்திற்கு வந்தான்.

சீதையின் மீட்சி

அனுமான் மிகுந்த சந்தோஷத்துடன் இராமன் முன்னே நின்றான். பிறகு அனுமானால் சீதையின் செய்தியை இராமன் அறிந்தான். அகம் மகிழ்ந்தான். போனவுயிர்

வந்தததுபோல் தேகம் பூரித்தான். இனி சீதையை மீட்டால் ஒழிய வேறொன்றில் பிரவேசிப்பதில்லை எனத் துணிந்தான். உடனே சுக்கிரீவனுக்கு விஷயத்தைத் தெரிவித்தான். சுக்கிரீவன் அப்பொழுதே வானரப் படைகளை ஒன்று கூட்டினன். கூட்டிய சேனைகளை வகை வகையாகப் பிரித்து அனுமான் வசத்தில் ஒரு பகுதியும், சாம்புவான் வசத்தில் ஒரு பகுதியும், அங்கதன் வசத்தில் ஒரு பகுதியும் ஒப்புவித்தான். அரக்கன் ஆளுகையில் வானர சேனைகள் எழுந்தன. இராம லட்சுமணர்களும் சுக்கிரீவனும் சண்டைக்குப் புறப்பட்டுத் தென் கடல் சேர்ந்தார்கள். அங்கு இராமன் வானரர் சகாயத்தால் கடல் தாண்ட வாராவதியொன்று கட்டுவித்தான். அப்பால் இலங்கையினுள் பிரவேசித்தான்.

இலங்கையோ ஒரு பெரிய தேசம். பொன் மயமான பட்டணம். அது நாற்புறமும் நீரினாலே சூழப்பட்டது. அதில், ஆகாயத்தை அளாவும் மாளிகைகள் உண்டு. சுற்றிலும் மலைகளைப்போல் மதில்கள் சூழ்ந்திருக்கும். அம்மதில்களுக்கு இப்பால் அகன்று ஆழ்ந்த அகழிகள் இருந்தன. அந்நகர வாயலில் அநேகம் ஆயிரம் வீரர்கள் ஆயு

தங்களுடன் காவலிருந்தார்கள். இராமனுக்கு இராவணனை வதைக்க எண்ணமிருந்தும், அந்நகர மாந்தர்களைக் கொல்ல இஷ்டமே கிடையாது. தங் காதலியை விட்டு விடின் தாம் சண்டை செய்யத் தயாராக வில்லை என்று இராமன் இராவணனுக்குத் தூது அனுப்பினன். அவன் துர்மதியால் அதைச் செவியிற் கொள்ளவில்லை சீதையை விடவும் சம்மதிக்கவில்லை. உடனே அவனும் தன் சேனையைச் சித்தம் செய்தான்.

அப்பால் இருதிறத்துச் சேனைக்கும் போர் விளைந்தது. வானர வீரர்கள் மரங்களையும் மலைகளையும் வீசி இராக்கதர்மேல் எறிந்தார்கள். இராட்சசப் படைகள் கத்திகளாலும் கோடரிகளாலும் தடிகளாலும் தாக்கினர்கள். இராம லட்சுமணர் தம் விற்களை வளைத்து விதம் விதமான போர் செய்தனர். சண்டையின் சப்தத்தால் பூமி அதிர்ந்தது. வானம் நடுங்கிற்று. தேவர்கள் திகைத்தனர். நாகர் நடுங்கினர். முனிவர்கள் மோன நிலை தவிர்ந்து, ஞானக் கண்ணல் செய்தி தெரிந்து மகிழ்ந்தனர். இலங்கை ஏங்கிற்று. அரக்கர்கள் எல்லோரும் சின்ன பின்னப் பட்டோடினர். இரத்த வெள்ளம் கடலையும் செந்நிறமாக்கியது. இராவணன் காமமும்,

கொடுமையும் அவனுயுளோடு ஒழிந்தன போரும் முடிவடைந்தது. புண்ணிய வுலகத்தவரும் போற்றிப் பூமழை பொழிந்தனர். புலவர்களும் போர்த் திறங் கண்டு பரணி பாடினர்.

காற்று ஓய்ந்தும் அலை ஓயாததைப் போல இராவணன் இறந்தும் சீதையின் துக்கமோ முடியவில்லை. துரதிர்ஷ்டமே உருவாய் வந்த அக்கற்பினுக் கருங்கலத்திற்கு வயிற்றுவலி தீர்ந்து தலைவலி வந்ததுபோல வேறொரு துன்பம் சம்பவித்தது. இராவணனைக் கொன்ற இராமன், உடனே ஓடிவந்து தன்னை அழைத்துப் போகாமல், அவருடைய பணியாளைப் பல்லக்குடன் அனுப்பிச் சீதையை அழைத்துவரச் சொன்னர். அவ்வாறே சில ஆட்கள் அவளை அழைத்துப் போக வந்தார். அவளுக்கு அதிக வருத்தம் உண்டாயிற்று. தன் நாயகன் இவ்வாறு செய்வதேன்? என்ன காரணமோ? அவர் என்னிடம் வைத்த அன்பையும், அவர் எனக்காக அடைந்த கஷ்டத்தையும் மறந்தாரோ? அவர் என் கற்புறுதியையும், என் குணநலத்தையும் சந்தேகித்தார் போலும். அவர் சித்தத்தின்படி நடப்பதே நமது கடமை

என்று அப்பல்லக்கின் மேலேறி இராம னிடம் சென்றாள்.

அப்போது இராமனைச் சுற்றிக்கொண் டிருந்த வானரவீரர்கள், சீதை வருவது அறிந்து அப்பால் சென்றார்கள். இராமன் அவர்களை அப்புறம் போகவேண்டாமென்று தடுத்தான். சீதை பல்லக்கிலிருந்து கீழே இறங்கி நடந்து வந்து இராமனை வணங்கி எதிரில் நின்றாள். இருவரும் ஒருவர் முகத் தை ஒருவர் உற்றுப் பார்த்தார்கள். இராமன் ஒன்றும் சொல்லாமல் சும்மா விருந்தார். அவன் முகத்தில் சந்தோஷம் சிறிதும் தோன்றவில்லை.

சீதைக்கோ எல்லையில்லாத துக்கம் மூண்டது. வாய் திறக்கப் பயந்தாள். இத் துக்கம் சிறையிருந்த துக்கத்தினும் நூறு பங்கு அதிகமாயிற்று. இராமனுக்கு இப்படி மாறுதல் உண்டானதற்குக் காரணம் அவள் மனதிற்கு எட்டவில்லை. இரண்டு தடவை பேச முயன்றாள்; ஆயினும் அவள் நாக்கு எழவில்லை. கண்ணீர் தானாகவே அவள் கன் னத்தில் இருந்த மாசைக் கழுவிற்று. இராம னைப் பார்த்து பெருமூச்சு விட்டழுதாள். தன் பொருட்டு அவர் ஊன் உறக்கமின்றி

அலைந்ததாயும், மனம் நொந்ததாயும் அனுமான் சொன்ன வார்த்தைகள் பொய்யாக விருக்குமோ? அப்படியாயின் இவ்வளவு வானரங்களைக் கொண்டு வந்து பெரும் போர்புரிந்து அரக்கர்களை அழிப்பானேன்? என்னிடத்தில் அவருக்கு என்ன மனக் குறையுளதோ வென்று நினைத்து நெடுமரம் போல அசைவற்று நின்ருள்.

பிறகு இராமன் வாய் திறந்து, "பெண்ணே! என் மனைவியான உன்னை இராவணன் எடுத்து வந்ததால் என்னை உலகம் பழிக்குமே என்று அஞ்சி, இங்குவந்து இராவணனைக் கிளையோடு கொன்றேன். உன்னை விடுவித்தேன். என் பகையை அழித்தேன். என் கவலையும் தொலைந்தது. இதுகாறும் நம்மிருவருக்குள் இருந்த உறவு ஒழிந்தது. இனி நீ உன்னிஷ்டப்படி எங்கேனும் போகலாம். பிறனுடைய ஆளுகையில் இருந்த உன்னை நான் திரும்பவுங் கொள்ளுதல் தகுதியன்று. இனிமேல் உன்னை என்னிடம் இருந்து வாழவிடேன்" என்று கடுமையாகச் சொன்ஞர்.

இவ்வார்த்தைகள் சீதையின் நெஞ்சைப் பிளந்தன. ஒருநாளும் இத்தகைய கொடு மொழிகளைக் கூருத தன் கணவன்

இன்று சொன்ன வார்த்தைகள் அவளுக்கு எப்படி யிருக்கும்? அங்கே இருந்த இலக்குடணனும் வானரவீரர்களும் அதைக் கேட்டிருக்க, அவளுக்கு அடக்கொணாத துக்கமும் வெட்கமு முண்டாயிற்று. கொஞ்ச நேரம் தலை கவிழ்ந்து இருந்தாள். பிறகு அழுதாள். நிமிர்ந்தாள். ஐயனே! உலகில் இருக்கும் சாமானிய பெண்களைப் போல என்னையும் நினைத்து இங்ஙனம் சந்தேகிக்கின்றீரோ? நீர் சொன்ன சொற்கள் என் காதைத் துளைக்கின்றன வென்பதை அறியீரோ? என்ன ஆச்சரியம்! என்னை ஒருபோதும் அவ்விதம் எண்ணி விட-வேண்டாம். நான் குற்றமற்ற மனதுடையவள். கற்பே ஆபரணமாகப் பூண்டவள். கணவனை அன்றிப் பிறனைக் கனவிலும் காணாதவள். கல்லென்றாலுங் கணவன்; புல்லென்றாலும் புருஷன் என்னுங் கருத்தினை யுடையவள். உலகில் துஷ்டப் பெண்கள் பலருண்டு. அவர்களைக் கொண்டு எல்லோரையும் ஒன்றாக மதித்து விடல் வேண்டாம். என் குணத்தை நன்றாக அறிந்த உம்மிடம் நான் அதைச் சொல்ல வேண்டுமோ! என்னை இராவணன் தொட்டானென்று சிலர் சொல்லவுங் கூடும். அது என் செயலன்று. தற்செய

லாய் நடந்த திமை. என்னை அத்தியன் எடுத்துச் செல்லும்போதும் நான் தங்களை மறவாமலே பலகாலும் கூவி அழைத்தேன். அழுதேன். பெண்ணுகிய யான் என்ன செய்ய வியலும்? என் அன்பின் அளவைத் தாங் கள் அறியீரோ? என் கெட்ட காலத்தால் அது தங்களுக்கு மறதியாயினவோ? எனது ஆகாத காலத்திற்கு எல்லாம் அவ்வாறு தான் வரும். நான் பரிதபிப்பதால் ஆகும் காரியமென்? என்னை வெகு சிரமத்துடன் தேடிவந்த அனுமானிடம் தங்களுடைய அந்தரங்கமான அபிப்பிராயத்தைத் தெரி வித்திருக்கலாமே? அப்படித் தெரிவித்தால் அப்போதே என் தேகத்தைத் தொலைத்துக் கஷ்டத்தைப் போக்கி யிருப்பேனே. என் ஞல் தாங்கள் அடைந்த கஷ்டங்கள் அள விடக் கூடாததாகும் என்பதை நான் அறி வேன். இக்கடலை அணைகட்டித் தாண்டி இங்கு வந்து அடைந்த சங்கடங்கள் எல் லாம் இல்லாமல் போமே. நான் பட்ட பரி பவமோ அளவு கடந்தது. அத்துன்பங்கள் யாவற்றையும் தங்களைக் காணும் பொருட் டாக வல்லவா நான் சகித்திருந்தேன். நீர் இவ்விதமான எண்ணத்தைக் கொண்டு ளீர் என்பதை நான் முன்னமே அறிந்தால்

என்னுயிரை மாய்த்திருப்பேனே. தாங்கள் என்னிடம் இத்தகைய சந்தேகத்தை வைக்க மாட்டீர் என்றல்லவோ என் உயிர் வைத்திருந்தேன். தங்களுடைய சந்தேகம் இன்னும் தொலையவில்லையோ? நான் உத்தம மாது என்று இன்னும் தமது உள்ளத்தில் தோன்றவில்லையோ? அந்தோ! என்றும் செவியில் கேளாத வார்த்தைகளை நான் கேட்கும்படியாயினவே என்று மனம் துடித்தாள்.

### சீதையின் துணிவு.

இராமன் சீதையின் சொல்லைக் காதில் ஏற்கவே யில்லை; அவன் மனம் சிறிதும் இரங்கவே யில்லை. அவன் மரம்போலச் சும்மாவிருந்தான். சீதை 'இனி என் சொல்லியும் பயன்படப் போவதில்லை. கல்லாயினும் கரைந்துவிடும்; இவருடைய கடின சித்தம் கொஞ்சமேனும் இளகவில்லை. நாம் பன்னிப் பன்னிச் சொல்லுவதாலே அடையப் போகும் நலத்தைக் காண்கிலேன்' என்று, அருகில் இருந்த இலக்குமணரைப் பார்த்து, "மைத்துனரே! நீர் இரக்கமுள்ளவரென்பதும், என் குணத்தை நன்றாக அறிந்தவரென்பதும், நான் அறிவேன். நீரும் நான் குற்றமுள்ளவள் என்று நினைக்கின்றீரோ?

இனி நான் இவ்வுலகத்தில் இருந்து பயனென்ன? திரிந்த பால் தெய்வத்திற்கு ஏற்குமோ? மனம் வேறுபட்டால் பொருந்தும், குணம் வேறுபட்டால் பொருந்துவதுவுமுண்டோ? ஆகையால், இப்பொழுதே நான் என் உயிர்விடுவேன். அதற்கு நீர்தான் பேருபகாரம் செய்யவேண்டும். முட்டநனைந்தார்க்கு ஈரமில்லை; முழுதும் துணிந்தார்க்கு துக்கமில்லை. சாகிறவனுக்குச் சாகாம் முழங்கால் அளவு; என்றபடி நீர் என் மேல் தயைசெய்து ஒரு தீக்குழி மூட்டும். அதில் விழுந்து என் துன்பத்தை நீக்கிக் கொள்ளுகிறேன்" என்றாள். அச்சொல் கேட்ட வானரவீரர்கள் வாடினார்கள். இலக்குமணனுக்கோ அடக்கமுடியாத துக்கம் உண்டாயிற்று. கண்களில் மாலை மாலையாக நீர் வழிந்தோடியது. என்ன செய்வான்? அண்ணனைப் பார்ப்பான். ஆகாயத்தை நோக்குவான். பெருமூச்சு விடுவான். அப்போது இராமன் முகமோ சீற்றத்தால் சிவந்து துலங்கிற்று. இலக்குமணனுக்கு இன்னது செய்வதெனத் தோன்றவில்லை. விதியைக் கடத்தல் எவருக்கும் அருமையன்றோ எனத் தன்னைத் தானே திடஞ் செய்துகொண்டான்.

உடனே தன் அண்ணியின் ஆணைப் படி ஒரு குழியைவெட்டி, அதில் * இந்த னத்தைப் போட்டு அக்கினியுண்டாக்கினன். அச்சமயத்திலாவது தன் அண்ணன் எண் ணம் உருகுமென்று நினைத்தான். இராமன் மனதோ கல்லைபோல் இருந்தது. இலக்கு மணன் மனம் தத்தளித்தது. தான் என்னவா வது சொல்லின், அண்ணனுக்குக் கோபம் அதிகரித்துவிடுமே என்று பயந்து ஊமை யைப்போல விருந்தான். வானர வீரர்கள் தமது கண்களை மூடிக்கொண்டு, உயிரற்ற மரத்தை யொத்தவராகவே இருந்தனர்.

சீதை கொஞ்சமும் தாமதஞ் செய்யாமல் அக்குழியின் சமீபத்தில் வந்தாள். இலக்கு மணன் தன்னை மறந்து அழவாரம்பித்தான். அனுமான், அந்தோ! இதென்ன விபரீதம் எனது கஷ்டம் எல்லாம் வீணாயினவே எனக்கண்ணீர்விட்டுக் கதறினன். சுக்கிரீவன் நான் பட்டபாடெல்லாம் இப்பரிபவத்தைக் காணவோவென்று நினைத்து அடிக்கடி கைகளைப் பிசைந்து மூக்கைச் சிந்தினன். இது எவர்செய்த தீமையோவென்று மனங் கசிந்து மாழ்கினன். அதற்குள் தீயோ கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது.

---

* இந்தனம்=விறகு.

அநேகர் அந்த அக்கினியின் சுவாலைக்குப் பயந்து ஓடினார்கள். தேவர்கள் ஆகாய மார்க்கத்தில் வந்து நின்றுகொண்டு, இதென்ன விபரீதச் செயல் என்று வருந்தினார்கள்.

சீதைக்கு ஒருநாளும் இல்லாத சந்தோஷம் தானாகவே திடீரென் றுண்டாயிற்று. அவள் முகம் சிறிதும் கோணவில்லை. அவள் உள்ளம் கொஞ்சமும் வருந்திற்றில்லை. அவள் தன் இரண்டு கைகளையும் தலைமேல் எடுத்துக்கொண்டு, "ஓ தீக்கடவுளே! நான் என் மணவாளனை அன்றிப் பிறரைக் கனவிலும் கருதாதது உண்மையாயின், நான் என் மணவாளனையே குலதெய்வமாகக் கொண்டதுண்மையாயின், என் நடத்தை மாசற்றதென்பது மெய்ம்மையாயின், இங்குள்ளோர் எல்லோரும் கண்ணாற்கண்டு திருப்தி அடையக்காட்டுவாய். இதோ உன்னிடம் வந்தேன்" என்று தீயிற் குதித்தாள்.

அங்கிருந்தவர்கள் எல்லாம் அலறினார்கள். சிலர் தம்மை மறந்து தாசரதி மகனைத் தூஷித்தார்கள்.

ஆஹா! அப்போது நடந்த அற்புதக் காட்சியை என்ன வென்பேம்? தீயானது கொழுந்துவிட்டு எரிந்துகொண் டிருந்தும்

அக்கற்பினல்லாள் மேனியில் தீண்டவில்லை. அவளது தேகம் வாடவில்லை. அவள் உடுத்தியிருந்த ஆடையும் பற்றவில்லை. இதன்மேல் என்ன சொல்லவேண்டும்? அவள் அத்தீயின் இடையில் பூவில் வீற்றிருக்கும் இலக்குமியைப்போல் கூப்பின கையும், சிரித்த முகமுமாகவே பொலிந்தாள். எல்லாவற்றையும் சிறிதும் கருணையில்லாமல் எரித்து அழிக்கும் அக்கினிக்கும் தன்னைத் தப்பிக்கச் செய்யும் அம்முழுக் கற்புடைய சீதையின்மேல் சிறிது இரக்க முண்டாயிற்று.

அப்பால் சிறிது நேரத்திற்கு எல்லாம், "ஓ இராமா! உன எண்ணம் ஒருவருக்கும் தெரியாது, அதை நானறிவேன். உன் மனைவியான சீதை ஒரு பாவமும் அறியாதவள். உம்மைத்தவிர வேறொருவரையும் விரும்பாதவள். நீர் அவள் நெடுநாள் இவ்விலங்கையில் தனித்து இருந்தாள் என்று எண்ணலாம். இராவணனால் அடிக்கடி இம்சிக்கப்பட்டாளே என்றும் சந்தேகிக்கலாம். அப்படிப் பிசகாய் அவளை நினையாதீர். அவள் உம்மையன்றிப் பிறிதொன் றறியாள். அவளை நீர் வேறாக நினைக்க வேண்டாம். உடனே தாமதிக்காமல் ஏற்றுக்

கொள்ளும். அவளுடைய கற்பாகிய அனல் என்னால் தாளமுடியவில்லை. அவள் உள்ளம் இத்தீயினும் புனிதமானது. இனி அவளை வெறுப்பது தகாது. அவளைப் புண்படுத்தினால் அகிலமும் அவதிப்படும் என்றார். அவ்வக்னி பகவான் வார்த்தைகளைக் கேட்டவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். சீதையின் பரிசுத்த குணத்தை வாயாரத் துதித்தார்கள். இவளுடைய புகழ் ஏழுலகத்தவரும் ஏற்றற்கு அரியது. இவளது தெய்வக்கற்பு தெய்வ லோகத்து மாதர்களும் அடைய முடியாது. இதல்லவோ அறக்கற்பு என்று ஆனந்தக் கூத்தாடினார்கள்.

இராமன், எல்லாரும் காணத் தன்கையில் இருந்த வில்லைக்கீழே எறிந்தான்; தன் மனையாளை வாரிஎடுத்தான். வாயாரப் புகழ்ந்தான். "பெண்ணே! என்மேல் கோபம் வைக்க வேண்டாம். உண்மையில் உன்னை நான் சந்தேகிக்கவில்லை. இவ்வுலகம் உண்மை அறியாது. உன் மனநிலை தெரியாது. நான் ஒருவனே அறிவேன். நீ வாக்காலும் மனத்தாலும் காயத்தாலும் மிகவும் தூய தன்மை யுடையவள் என்பதைத் தெரிவேன். இரும்பை எறும்பு துளைக்குமோ? கற்றூணை செல்லெரிக்குமோ? அக்கினியைத் தகிக்கும் உன்னை அத்தீயனாகிய இராவணன் தீண்டி

யும் உயிருடன் என் பாணத்திற்கு இலக்கானேனே? உன் பரிசுத்தத்தை இன்றுதானு அறிவேன். உன் சுத்தம் உனக்கே தெரியாது. எனக்கு நன்ருய்த் தெரியும். நீ பிறரைப்போல் ஒருவர் வயிற்றில் பத்துத் திங்கள் கிடந்து பிறக்கவில்லை. நீயோ பூமிதேவி கொடுத்த புத்தமுதம். நான் உன்னை உடனே அங்கீகரித்திருந்தால் சனங்கள் என்னைக் குறை கூறுவார்கள். ஒருவன் வாயை மூடலாம்; ஊர்வாயை மூடமுடியுமோ? உலகம் பலவிதமாகச் சொல்லுமன்ருே? உன் மகிமையை உலகம் எப்போது தெரிந்துகொள்வது? உனது அரிய செயலைக் கண்டு பெண்டிர்கள் அறிவது எப்போது? இத்தருமங்கள் உன்னுல் வெளிப்படட்டும். கடவுள் உன்னைக் கைவிடமாட்டார் என்பதை நான் அறிவேன். ஆனது பற்றித் தான் நீ தீயில் விழும்போதும், நான் ஒன்றும் சொல்லாமல் சும்மா விருந்தேன்" என்று சொல்லிப் புகழ்ந்தான்.

சீதையின் அகம் குளிர்ந்து முகம் அன்று பூத்த மலரைப்போல அலர்ந்தது. அவள் தன் கணவனைக் கட்டிக்கொண்டு கண்ணீர் உகுத்தாள். அங்கே இருந்தவர்கள் அகம் மகிழ்ந்து ஆனந்த பரவசரானுர்கள்.

அதன்மேல் இராமன் அயோத்திக்குப் போகப் புறப்பட்டார். சீதை, இலக்குமணன் சுக்கிரீவன், அனுமான் முதலியவர்கள் மறுபடியும் கடலைத்தாண்டி அயோத்திக்குள் வந்து சேர்ந்தார்கள்.

அயோத்தியா நகரம் பட்டங் கட்டுவதற்காக அலங்கரித்ததைப் போலில்லாமல், அன்று எல்லாம் அழகாகவே தோன்றின. வீதிகள் தோறும் தண்ணீர் தெளித்து அலகிட்டுக் கோலம் போடப்பட் டிருந்தன. மாளிகையின் மேலிருக்கும் கொடிகள் எல்லாம், ' தருமத் தலைவன் ' வந்துவிட்டான். இனித் தடையின்றியே வாருங்கள் என்று வெளியிற் செல்லுபவரை அழைப்பது போல அசைந்தாடிக்கொண் டிருந்தன. இசைக் கருவிகள் ஒலி செய்ய, யானை குதிரைகள் அணியாக வரச் சத்துருக்கனனும் பரதனும் எதிரே வந்து, இராமன் முதலியவரை அழைத்துச் சென்றார்கள். அச்சமயம் பரதனுக்கு உண்டான அன்பிற்கு அளவே கிடையாது.

பிறகு தன் மகனும் மருகியும் வரக் கண்ட கோசலை மனம் குளிர்ந்தாள். அக்கோசலை அடைந்த சந்தோஷமானது கண் பெற்ற குருடனுக்கும் பொருள் பெற்ற

ஏழைக்குந் தான் உவமானமாகச் சொல்ல லாம்.

அவள் அவ்விருவரையும் தனித்தனி யாகக் கட்டித் தழுவுவாள். என் கண்ணேவென விளிப்பாள். கண்ணே என்று கூவுவாள். இங்ஙனம் கொஞ்சநேரம் ஆனந்தப்பட் டாள். தான் கணவனை இழந்து கைப்பெண் ணாகி இருக்கும் துக்கத்தையும் மறந்தாள். ஊரார் எல்லோரும் உத்தமனையும் உத்தமி யையும் கண்டு கண் குளிர்ந்தார்கள். அப் போது கைகேசி ஒருத்தியே அங்கே காண வரவில்லை. அவள் தான் செய்த கொடு மையை நினைத்து இராமனைக் காண வெட்க மடைந்தாள். ஆனால் இராமன் அவள் செய்தது தீங்கு என்று மனதில் சிந்திக்கவே யில்லை. சிற்றன்னை வாராததை அறிந்த இராமன் தானே அவளை ஓடிக் கட்டிக் கொண்டு, அவளது க்ஷேமத்தை விசாரித் தான். அப்பால், 'என்னருமைத் தாயே! உமது வாக்கால் அல்லவா நான் இவ்வுலகில் பெற முடியாத பெருமை அடைந்தேன். எனது பெருமைக்குக் காரணம் தாங்களே. தாங்கள் என்னைக் காட்டிற்குப் போகும்படிச் சொல்லாவிடின், நான் கொடிய அரக்கர் குலம் வேரறுப்ப தெப்படி? தவசிகளின்

சேர்க்கையும் தரிசனமும் பெறுவதெப்படி? அவர்கள் துன்பம் துடைப்ப தெப்படி?' என்று பிரியமாய்ப் பேசினான். அவைகளைக் கேட்ட கைகேசி ஒருவிதமான பதிலும் சொல்லாமல் மௌனமாக விருந்தாள். ஆனால், தந்தந்தை இல்லாத குறையொன்று மாத்திரம் அவனைக் கொஞ்சம் வருத்தியது.

பின்பு இராமனுக்கும் சீதைக்கும் பொன் முடி சூட்டிப் பட்டாபிஷேகம் நடந்தது. அவர்களுடன் வந்த வானரத் தலைவர்கள் விடைபெற்றுத் தந்தமது ஊருக்குச் சென்றார்கள்.

அதன் பின்னர் இராமனும் சீதையும் இன்பமாக இல்லறத்தில் வாழ்ந்து வந்தார்கள். சீதையின் நடத்தையானது நாளுக்கு நாள் சுடச்சுடப் பிரகாசிக்கும் பொன்னைப்போற் பொலிந்தது. அவளது குணத்தைக் கொண்டாடாதவர்கள் அக்குடும்பத்துள் ஒருவருமே கிடையாது. மாமிமார்களும் அவளைக் கண்டு மகிழ்வர். மைத்துனன்மார்களும் அவளைக் கண்டு தொழுவர். அந்நியர்கள் எல்லோரும் அவளே தந்தெய்வம் என்று புகழ்வர். இவளைக் காட்டினும் சிறந்த கற்பும், பதிபக்தியும், பெரிய வணக்கமும் இருந்த மாதர்கள் இவ்வுலகு தோன்

றிய நாள் முதல் இதுவரையில் இருந்ததே கிடையாதென்று சத்தியம் இட்டுச் சொல்லு வேம் என்ருர்கள். பிறகு இராம நாமத்தின் பெருமையை உள்ளபடி அறியாதவனைக் 'கல்குண்டு' என்று சொல்லுவது போலவே, சீதை யென்னும் அந்நாமத்தை அறியாத வனை முழுமூடன் என்னலாம்! இத்துணைய பெருமையுடையாளது சரிதம் இராமாயணத் தில் இலையினிடத்துக் காய்போல மறைந் திருப்பதினுல் அல்லவா; 'ராமாயாச் சரிதம் மகத்' என்பதினும், 'சீதாயாச் சரிதம் மகத்' என்பதே சிறப்புடையது என்று அறிவாளர்கள் எழுதிப் போயினர்.

முற்றிற்று.

148900

Tirupati Sri Mahant's Press, Printers, Madras.

# OUR PUBLICATIONS

## ENGLISH

| | Rs. | As. | Ps. |
|---|---|---|---|
| Pattinathar ... ... ... | 0 | 8 | 0 |

## TAMIL

| | Rs. | As. | Ps. |
|---|---|---|---|
| [illegible] ... ... | 0 | 8 | 0 |
| [illegible] ... ... | 0 | 8 | 0 |
| [illegible] ... ... | 0 | 6 | 0 |
| [illegible] ... | 0 | 4 | 0 |
| [illegible] 1 ... | 0 | 4 | 0 |
| [illegible] 2 | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] 3 | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] 4 | [illegible] | [illegible] | [illegible] |

## TELUGU

| | Rs. | As. | Ps. |
|---|---|---|---|
| [illegible] | [illegible] | 8 | 0 |

K. S. Devarajulu Naidu, & Co.,

261, China Bazaar Road,

MADRAS.